# தமிழரசு


16-11-1984 75காசு





அன்னை இந்திரா காந்தியின் இறுதி யாத்திரை (3.11.84)

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் உடல் சாந்தி வனத்தில்
எரியூட்டப்படுதல் (3.11.84)





## தமிழுக்கு மரியாதை தந்த தாய்!

"இந்த மாநாட்டுக்கு வரவேண்டும் - வாழ்த்துக் கூறவேண்டும் என்றும், தமிழக மக்களின் அன்பை அவர்கள் காண வேண்டும்-தமிழகம் அவரை எப்படி மதிக்கிறது என்பதைத் தொடர்வதற்காக மீண்டும் ஒரு நல்ல வாய்ப்பை அவர் காணவேண்டும் என்று விரும்பிய எங்கள் உள்ளத்தைப் புரிந்து கொண்டு தமிழுக்கு மரியாதை - உயர்வு - பாராட்டு என்ற வகையில்-இன்று எத்தனையோ வேலைகள் இருந்தாலும் உலகப் பிரச்சினைகள் இருந்தாலும்-தமிழகத்துக்கு வந்து தமிழ் மொழிக்குத் தரவேண்டிய மரியாதையைத் தரவேண்டும்-மாநாடு நடத்துபவர்களைத்-தமிழ் அறிஞர்களை வாழ்த்த வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற முனைப்போடு பிரதமர் அவர்கள் இன்று இங்கு கலந்து கொள்வதை எண்ணி எண்ணி நான் உள்ளம் பூரித்து மன நெகழ்ச்சியோடு நின்று கொண்டிருக்கிறேன்.

"இது ஏதோ முகஸ்துதியாகவோ - ஏதோ பாராட்டுவதற்காகவோ சொல்கிற வார்த்தை அல்ல. அவர்கள் தாயாக இருப்பது மட்டுமின்றி இந்த நாட்டின் தலைவியாகவும் இருப்பதை எண்ணி நாம் பெருமைப்படுகின்றோம்."

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர்.

[ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு நிறைவு விழாவில்.[




திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி - கார்த்திகை 1

தமிழரசு

16-11-1984

மலர் : 15
இதழ் : 10

# வளமும் செழுமையும் வற்றாத தமிழ்

## ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் அன்னையின் பெருமிதம்

“இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற அழகிய நகரில் உலகத் தமிழ் மாநாட்டில் உங்களுடன் இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சங்கப் புலவர்களின் தேர்ந்து தெளிந்த மொழிகளையும் புலமை நயமிக்க காவியங்களையும் பற்றிய நினைவுகளை நம் முன் கொண்டு வருவது மதுரை நகரம்.

பல மொழிகளும் பல கலாசாரங்களும் ஒருங்கே அமையப் பெற்று வரும் நம் பொதுமை சூழ்நிலையில் முக்கிய இடம் பெற்றுள்ள இலக்கியம், கலை, கலாசாரம் பற்றிச் சிந்தித்துக் கூடிப் பேசி ஆலோசித்துப் பல நாட்டு அறிஞர்களும் ஒன்றாகக் கூடுவதற்கு ஏற்புடைய பொருத்தமான நகரம் இந்த மதுரை.

மனிதனின் வாழ்வில் அடிப்படை நியதிகளையும் கடமைகளையும் வலியுறுத்தும் பேரிலக்கியமாகவும் சிறந்த நீதி நூலாகவும் உள்ள திருக்குறள் இதை நமக்கு நினைவுறுத்துகிறது.

“திரைகடலோடித் திரவியம் தேடு” என்று அவ்வைப் பிராட்டியார் கூறினார்.

தமிழர்கள் எகிப்து, கிரேக்கம், ரோமாபுரி போன்ற நாடுகளுடன் நெருங்கிய வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர்.

வாசனைத் திரவியங்கள், ஏலக்காய், கிராம்பு போன்றவற்றையும் அணிகலன்களையும் தமிழகத்திலிருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

கிரேக்க, லத்தீன் அரசர்கள் தமிழக மக்களின் உயர்ந்த பண்பாட்டினைப் பற்றிப் பாராட்டியுள்ளனர்.

தொடக்கக் கட்டத்தில் கிரேக்கர்களும் பிறகு அரபு நாட்டவரும் தமிழக மக்களின் பன்னாட்டு வர்த்தகத்துக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தந்தனர்.

தமிழில் இருந்து கிரேக்கர்கள் கடன் வாங்கிய பல சொற்கள் பின்னர் ஐரோப்பிய மொழிகளில் புகுந்துள்ளன.

ரோம் நாட்டைச் சேர்ந்த பழைய நாணயங்கள் மதுரையில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டன.


இதிலிருந்து மதுரையில், கிரேக்க-ரோம குடியிருப்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பது தெளிவாகிறது.

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று பாடிய புறநானூற்றுப் புலவர் இந்தப் புதுமைக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்.

தொன்மையும் வளமையும் மிக்க ஒரு மொழி தமிழ்.

இந்திய மொழிகளில் பேசப்படும் மொழிகளுக்குப் பெரிதும் மாறுபடாத நிலையில் எழுதப்பட்டு, பண்டைய பேரிலக்கியத்தில் அமைக்கப்பட்டு இன்றும் பேச்சு வழக்கு உள்ளதுமான ஒரே மொழி தமிழ்தான்.

கவிதை நயம் பொருந்திய தமிழ், பல நாட்டுத் தொடர்புகளையும் பெற்றிருந்தது.





## தமிழக அமைச்சரவை இரங்கல் தீர்மானம்

மறைந்த பிரதமர் இந்திரா காந்திக்கு அனுதாபம் தெரிவிக்கும் இரங்கல் தீர்மானம் ஒன்று தலைமைச் செயலகத்தில் கூடிய [5.11.84] அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறியதாவது:

'மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம் முதல்வர் மற்றும் அமைச்சர்கள் சார்பிலும் தமிழக அரசு சார்பிலும் நிறைவேற்றப்பட்டது'.

'பிரதமர் ராஜீவ் காந்திக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மத்திய அரசுக்கும் எங்கள் சார்பில ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.'

குறுகிய மனப்பான்மையை வெறுத்து ஒதுக்க எனக்குச் சிறு வயதிலிருந்து போதிக்கப்பட்டு வந்தது.

வடக்கில் பிறந்த நான் கிழக்கிலும் மேற்கிலும் கல்வி பயின்றேன்.

வாழ்க்கையின் தொடக்கக் கட்டத்திலேயே தென்னிந்தியாவின் பல பகுதிகளில் நான் பயணம் செய்துள்ளேன்.

பொதுமை உணர்வு பெற்றவரை (நேரு) என் தந்தையாகப் பெற்றிருந்தேன்.

தமிழை நான் சில காலம் பயின்ற போதிலும் தமிழில் எனக்குப் பேச முடியாதது குறையாகத்தான் உள்ளது.

இருந்தாலும் 50 ஆண்டுகளுக்கு முன் நான் தமிழ் நாட்டுக்கு முதன் முறையாக வந்த காலத்திலிருந்து இன்றுவரை தமிழைக்கேட்டு உள்ளேன்.

அதன் வளம் - இனிமை – எழிலை நான் வியந்து பாராட்டியுள்ளேன்.

திருக்குறள், சிலப்பதிகாரம், பாரதியார் பாடல்கள் மொழி பெயர்ப்புகளைப் படித்து அவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்துள்ளேன்.

காமராஜர், அண்ணா, ராஜாஜி, சத்திய



மூர்த்தி ஆகியோர் தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்ப்பவர்கள். சமுதாயப் பாகுபாடுகள் நமது வாழ்க்கையைப் பாதித்துக் கூறு செய்துள்ளன.

சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகள் குறித்துத் தமிழ் அஞ்சத் தேவையில்லை.

தமிழின் உறுதியும் வளமும் ஒரு நாளும் பாதிக்கப்படாது. அதன் செழுமை ஒருநாளும் வற்றாது.

ஒரு மொழியின் பாதிப்பில் மறுமொழிக்கு அனுகூலம் என்பது சரியல்ல.

மத்திய அரசின் மொழிக் கொள்கை எல்லா இந்திய மொழிகளுக்கும் அரசியல் மொழிகள் மட்டும் இன்றி, சிறிய மொழிகள் அனைத்தின் வளர்ச்சிக்கும் உதவுவதுதான்.

மத்திய அரசு இந்தியில் மட்டும் தான் அக்கறை கொண்டுள்ளது என்று செய்யப்படும் பிரசாரம் தவறானது.

மத்திய அரசைப் பொறுத்தவரை எல்லா மாநில மொழிகளுடனும் அன்பு கொண்டு இணைப்பு மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று கருதுகிறது. ஆனால் இந்தித் திணிப்பை நாங்கள் விரும்பவில்லை. ஏனென்றால் அதனால் எதிரான விளைவுகளே ஏற்படும்.

[மதுரையில் நடைபெற்ற 5வது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து].






# அன்புத் தலைவருக்கு அமெரிக்காவில் சிகிச்சை

உடல் நலக் குறைவு காரணமாகச் சென்னையிலுள்ள அப்பல்லோ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம். ஜி. ஆர். அவர்களை நேரில் கண்டு நலம் விசாரிப்பதற்காகவே வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள், 'மறுபடியும் வந்து பார்ப்பேன்' எனக் கூறிச் சென்றார்.

ஆனால், அதுவே அவரது கடைசித் தமிழகப் பயணமாக இருக்கப் போகிற தென்று அப்போது நமக்கோ-அவருக்கோ தெரியாமலே போய்விட்டது!


பாவிகளால் சுட்டுப் படுகொலை செய் யப்பட்டு விட்டார் பிரதமர் இந்திராகாந்தி.


'யாரோ சில சீக்கியர்கள், வெறித்தனத் தால் அந்தக் கொடூரத்தைச் செய்தார்கள் என்பதற்காக அந்த இனமே வெறித்தன மானது என்று நான் சொல்ல மாட்டேன்' எனக் கூறித் தனது பெருந்தன்மையைக் காட்டிக் கொண்டிருக்கிறார் புதிய இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி.

அந்தக் கொடுமையான கொலைச் செயலை நம்மால் அத்தனை சாதாரண மாக எடுத்துக் கொள்ள முடிகிறதா?

தமிழக அமைச்சரவையே ஓர் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியது பிரதமரின் மறைவு குறித்து.

மாண்புமிகு முதல்வர் டாக்டர்எம்.ஜி.





ஆர். அவர்களின் துணைவியார் திருமதி வி. என். ஜானகி அவர்கள், ராஜீவ் காந்திக்கு இரங்கல் தந்தியொன்று அனுப்பினார். இதயம் பதறி, அதில் கூறப்பட்டு இருந்ததாவது:

''பிரதமர் இந்திரா காந்தி, கொடியவர்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளாகி மரணம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். நான் அடைந்துள்ள வருத்தத்தை எடுத்துச் சொல்ல வார்த்தைகள் கிடைக்காமல் தவிக்கிறேன்.

''கடந்த 15 தினங்களுக்கு முன்பாகத்தான், என் கணவரைப் பார்த்து உடல் நலம் விசாரிப்பதற்காகச் சென்னைக்கு இந்திரா வந்திருந்தார். என் கணவரின் நிலையைப் பார்த்துவிட்டு, அவர் நலம் பெறத் தேவையான சிகிச்சை அளிப்பதற்கு, எல்லாவிதமான உதவிகளையும் செய்து தருவதாக உறுதி கூறினார்.

''இந்தியாவுக்கு இந்திரா காந்தியின் தலைமை தேவைப்படும் இந்த இக்கட்டான நேரத்தில், அவர் மறைவு ஒரு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும்.

''இந்தப் பேரிழப்பைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவத்தையும் இந்திரா காந்தி விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்ற மன உறுதியையும் ஆண்டவன் உங்களுக்கு அளிக்கட்டும்.


''என் கணவர் சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''-இவ்வாறு அந்தத் தந்தியில் திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிகிச்சைக்கென 5-11-84 அன்று இரவு 10.40-க்கு ஏர்-இந்தியா தனி விமானம் மூலம் அமெரிக்க நாட்டுக்குப் பயணமானார். அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச் .வி. ஹண்டே, மாண்புமிகு முதல்வரின் தனிச் செயலாளர் திரு மு. பரமசிவம், டாக்டர்கள், நர்சுகள் உட்பட மொத்தம் 21 பேர் அவ்விமானத்தில் உடன் சென்றனர்,

தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதல் அளித்ததன் பேரிலும், விமானப் பயணம் முதல்வரின் நலத்திற்கு ஊறு விளைவிக்காதென டாக்டர்கள் பரிசோதித்துத் தெரிவித்ததன் பேரிலுமே இந்தப் பயணம் ஏற்பாடாயிற்று.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புறப்படுவதற்கு முன்பாக, அவர் விரைவில் குணம் பெற வாழ்த்தி, பிரதமர் திரு ராஜீவ்காந்தி எழுதிய கடிதமொன்றை மாண்புமிகு மத்திய



உள்துறை அமைச்சர் திரு நரசிம்மராவ், இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு ஜி. கருப்பையா மூப்பனார், வெளி விவகார கொள்கை நிர்ணயக் குழுத் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதி ஆகியோர் கொண்டு வந்தனர்.

தனி விமானத்தில் சென்னை வந்த அவர்கள் கொண்டு வந்த அக்கடிதத்தில் ''சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லும் தாங்கள் விரைவில் குணமடைந்து திரும்ப வாழ்த்துகிறேன். நேரில் வந்து தங்களை வழியனுப்ப நான் விரும்பியபோதிலும், தற்போதைய சூழ்நிலையில் அது இயலாமல் போனது குறித்து வருந்துகிறேன்'' எனக் கூறியிருந்தார் பிரதமர் திரு ராஜீவ் காந்தி.

அன்றிரவு ஒன்பது மணியளவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆம்புலன்ஸ் வேன் ஒன்றின் மூலம் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

மக்கள் பல்லாயிரக் கணக்கில் விமான நிலையத்திலும், வழிநெடுகிலும் கூடியிருந்து வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தி வழியனுப்பி வைக்க விமான நிலையத்தில் மாண்புமிகு மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா, அவரது துணைவியார் திருமதி இந்திரா குரானா, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு கர்நாடக அமைச்சர் திரு எம். ரகுபதி, அனைத்துக் கட்சிப் பிரமுகர்கள், கலையுலகப் பிரமுகர்கள்; சட்டப் பேரவை-மேலவை-நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம் வருகை தந்திருந்தனர்.

வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு செல்லையாத் தேவர், குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைலர் திரு என்.வி.என்.செல்வம், பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி சுலோசனா சம்பத், மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

எல்லோரது இதய வாழ்த்தோடும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பயணமான அந்த ஏர்-இந்தியா போயிங் விமானம், மீனம்பாக்கம் விமான நிலையத்தை விட்டுச் சரியாக 10.45 மணிக்குப் புறப்பட்டது.

அமெரிக்காவில், நியூயார்க் நகரில் உள்ள 'புரூக்லின் டவுன்ஸ்டேட்' மருத்துவமனையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிகிச்சை பெறுவார்கள்.

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் இன்று வரை, அந்த மருத்துவமனைத் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி, அவருக்கு உதவியாக இருந்த டாக்டர்கள் மணி, இராமலிங்கம், மற்றும் தமிழக அரசுஅமைத்த டாக்டர்கள், நர்சுகள் ஆகிய அனைவரும் மிகச் சிறப்பான முறையில் நம் முதல்வருக்குச் சிகிச்சை அளித்தனர். தமிழக மக்கள் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் அவர்களுக்கெல்லாம் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களும்...

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் குணம் பெறத் தொடர்ந்து பிரார்த்தனை செய்யுங்கள்'' என மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி வி. என். ஜானகி அம்மாள் அவர்களும் இங்கிருந்து பயணமாகு முன் வெளியிட்ட தனித்தனி அறிக்கைகளில் குறிப்பிட்டிருந்தனர்.

சென்னையிலிருந்து பம்பாய், லண்டன் வழியாக 24மணி நேர விமானப் பயணத்தின் பின், நியூயார்க் சென்றடைந்தார் மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர்.

புரூக்லின் மருத்துவமனையில் தீவிர கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர், அங்கு டாக்டர் ஸ்ரீபத்ராவ், டாக்டர் எல்லிபிரெட்மென் முதலான டாக்டர்கள் மூலம் மிகக் கவனமாகச் சிகிச்சை பெற்று வருகிறார்.

— அ. மருது.



# அமரர் இந்திரா



# அன்னை இந்திராவின் மறைவுக்கு அறிவுலகின் இரங்கலுரை

பேராசிரியர் டாக்டர்
**பொ. பா. சுந்தரேசன்**
துணைவேந்தர்
சென்னைப் பல்கலைக் கழகம்

**உ**லக வரலாற்றுடன் ஒருங்கிணைந்த பாரத துணைக்கண்ட வரலாற்றின் ஒரு நூற்றாண்டின் முடிவு நிலையில் நாம் இன்று இருக்கிறோம்.

பாரதியார் கனவு கண்டு, மகாத்மா காந்தி பெற்றுத் தந்து நேரு அடித்தளம் இட்ட சுதந்திர இந்தியாவை ஆக்க வழியில் செயல்படுத்திய அன்னை இந்திராவைவிட சமூகத்திற்கு மேலும் தொண்டு செய்ய விடாமல் மறைய வைத்தது நமக்கு ஒரு பேரதிர்ச்சி!

அன்னை இந்திராவின் நேரடிப் பார்வையில் இருந்த தேசிய அறிவியல் - தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தில் பணி புரிந்து அவரிடம் பழகும் வாய்ப்பு எனக்கு இறைவன் கொடுத்த பெரும் பேறு.

மேலை நாடுகளின் அறிவியல்-தொழில் நுட்ப வளர்ச்சிகளைக் கண்டு அவர் வியந்தார். தொன்று தொட்டு காலக் கட்டங்களில் முதிர்வடைந்த இந்திய சமுதாயத்தின் பழமை, பெருமைப்பண்புகள் புதிய வளர்ச்சிகளால் பாதிக்கப்படாதவாறு காக்க வேண்டுமென்று நினைத்தார். நம் முன்னோர் விட்டுச் சென்ற சிற்பங்கள், ஓவியங்கள், தாஜ் மகால் போன்ற கலைக் கூடங்கள் மாசு படாதவாறு தொழில் வளம் பெருக வேண்டுமென்று கவனித்தார். நம் நாட்டிற்கே உரித்தான பயிரின மற்றும் உயிரினங்கள் அழிக்கப்படாமல் பசுமையான சூழ்நிலையில்தான் மனிதனின் மேன்மையான எண்ணங்கள் மலரும் என்று கருதினார்.

தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளுடன் போட்டியிட்டு, நம் நாட்டின் உயிர்க்கோடிகளையும் ஆன்மாவையும் அழித்துவிடாமல் காக்க இந்தியப் பண்பாட்டுடன் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் வேண்டும் என்ற தொலை நோக்கப் பார்வை அன்னை இந்திராவிடம் தெரிந்தது.

மக்களின் வாழ்க்கைத்தரம் (Quality of life) உயர்த்தப்பட தொழில் வளர்ச்சி வேண்டுமென்று வற்புறுத்தினார். சுருங்கச் சொன்னால் வளர்ச்சி மட்டும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாது என்று எண்ணி இந்த நாட்டு மக்களின் பசி போக்கி, தூய நீர், காற்று உட்கொண்டு இயற்கையுடன் ஒன்று கலந்த ஓர் உயர்ந்த நிலைக்கு அறிவியலும்-தொழில் நுட்பமும் பயன்படத்தக்க ஒரு வளர்ச்சியை இந்திய மக்கள் உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்று அடிக்கடி சொன்னார்.

காலத்திலும் - தூரத்திலும் அவருக்கு மிக அருகில் இருந்த நம்மால் இந்தத் தொலைநோக்கு பார்வையை முழுமையாக மெச்ச இயலவில்லை. வரலாற்று ஏடுகளில் அவருடைய குறிக்கோள் சிந்தனைகள் எழுதப்படும்போது அன்றைய சமுதாயம் இப்படிப் பட்ட தலைவியையா குண்டடி பட்டு உயிர் நீக்கச் செய்தது என்று சொல்லத்தான் போகிறது. அதற்கு நாம் தலை குனியத் தான் வேண்டும்.

அவரது தந்தை நேரு தனது இறுதி உயிர் விருப்பில் (will) தானிறந்தபின் தன் உடலின் சாம்பல் இந்தியத் துணைக் கண்டத்தின் நிலம், நீர், மலை, கடல், ஆறு, வயல்கள் எல்லாவற்றிலும் தூவப்பட்டு இந்திய மண்ணுடன் இரண்டறக் கலக்க வேண்டுமென்று விரும்பினார்.

இன்று அத்தகைய பெருந் தலைவரின் ஒரே மகளின் இரத்தம் இந்தப் பாரதத் துணைக் கண்டத்தின் தலைநகரில் சிந்தியுள்ளது. அந்த இரத்தம் 70 கோடி மக்களின் கண்ணீரில் கலந்து இந்த நாட்டின் பட்டி தொட்டிகளை எல்லாம் தூய்மைப் படுத்த இறைவன் அருள் புரியட்டும்.



## ஐ. நா. பாதுகாப்பு மன்றம் தீர்மானம்

"இந்தியப் பிரதமர் என்ற முறையிலும், அணி சேரா இயக்கத்தின் தலைவர் என்ற வகையிலும் இந்திரா காந்தி தன்னை அமைதிப் பணியில் முற்றிலுமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்"

—ஐ. நா. பாதுகாப்பு மன்றத் தீர்மானம்



# வெற்றி தேடித் தந்த ஜவகரின் செல்வி


## கவிஞர் கண்ணதாசன்

இந்திய மலைகள் தோறும்
இந்திரா பேர்கேட் டாயா!
இந்திய நதிகள் எங்கும்
எதிரொலி கேட்கின் றாயா!
இந்தியக் கடல்கள் முற்றும்
இயங்கிடும் இசைகேட் டாயா!
இந்தியா இந்தி ராவே
இந்திரா இந்தி யாவே!

நல்லரசு அமைத்தாள்; மக்கள்
நலனெலாம் சமைத்தாள்; அன்று
கொல்புலி அணையா ளாகிக்
கொடுத்தனள் வங்கம் வாழ!

வல்லரசு என்றே இந்த
வையத்தில் பாரத நாட்டை
நில்லென வைத்தாள்; எங்கள்
நிகரிலா ஜவகர் செல்வி!

பலகோடிக் கால்கள் செல்லும்
பாதையும் ஒன்றே கண்டோம்!
பலகோடிக் கண்கள் பார்க்கும்
பார்வையும் ஒன்றே ஆனோம்
விலைகோடி கொடுத்தோ மேனும்
வெற்றிமேல் வெற்றி கண்டோம்!
சிலைகோடி வைத்தால் கூட
செல்விக்கு ஈடா காது!



# உலக ஏடுகள் கண்ணீர்!



பிரதமர் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டதை உலகப் பத்திரிகைகள் கண்டனம் செய்து தலையங்கங்கள் தீட்டியுள்ளன.

''ஆற்றல் மிக்க தலைவரை இந்தியா இழந்து விட்டது'' என்று ''தி யு.எஸ்.ஏ'' என்ற அமெரிக்க நாளிதழ் கூறியுள்ளது.

''துயரம் நிறைந்த இந்தக் கொடுமையை இந்தியா தாங்கிக் கொள்ளும். ஒருவேளை இதன் மூலம் புதிய படிப்பினையையும் அது கற்றுக் கொள்ளும். மாபெரும் தேசங்களுக்குக் குண்டு துளைக்காத ஆட்சி முறை தேவை'' என்று 'நியூயார்க் டைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

''இந்திய ஜனநாயக அமைப்பு நிலை பெறுவது உலகத்தின் ஆரோக்கியத்திற்கு அவசியமானது'' என்று 'தி டெய்லி நியூஸ்' கருத்து தெரிவித்துள்ளது.

''பயங்கரவாதிகளின் வெறித் தாக்குதல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளும் நிலையில் ஜனநாயகங்கள் இல்லை என்பதைக் காட்டும் மற்றொரு நிகழ்ச்சியே திருமதி இந்திரா காந்தியின் படுகொலை'' என்று ''நியூயார்க் போஸ்ட்' கூறியுள்ளது.

''இந்து-சீக்கியர் வெறுப்புணர்வைத் தணிப்பதற்குத் தனது தாய் கூறிவந்த மனப்புண்ணை ஆற்றும் நடவடிக்கையை மேற்கொள்வதுதான் ராஜீவ் காந்திக்கு முதலாவது பரிசோதனையாக இருக்கும்'' என்று 'பிலடெல்பியா' என்கொய்ரர்' குறிப்பிட்டுள்ளது.

''இந்திரா காந்தி இல்லாத இந்தியா'' என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டிய 'டைம்ஸ்' பத்திரிகை, மார்க்கரெட் தாட்சர், போப்பாண்டவர், ரொனால்டு ரீகன் ஆகியோரைக் கொலை செய்ய நடந்த முயற்சி பற்றிக் குறிப்பிட்டு, ''இந்தத் தடவை கொலையாளிகள் புதுடில்லியில் உலகத் தலைவர்களில் ஒருவரான இந்திரா காந்தியின் உயிரைப் பறித்துவிட்டார்கள், இதன் மூலம் இந்திய ஜனநாயகத்துக்குப் புதிய நெருக்கடியை உருவாக்கி விட்டார்கள்'' என்று கவலை தெரிவித்துள்ளது.

திருமதி இந்திரா காந்தி படுகொலை மற்றும் அவரது அரசியல் பற்றிய செய்திக்கு 8 பக்கங்களை 'டைம்ஸ்' ஒதுக்கியிருந்தது.

''அசாதாரணமான ஒரு தலைவரின் முடிவையும் உலகில் மிகப் பெரிய ஜனநாயகம் அபாயம் நிறைந்த அரசியல் பாதையில் அடி எடுத்து வைப்பதையும், திருமதி இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டது குறிக்கிறது'' என 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' கூறியுள்ளது.

''அவர் ஓர் உலகத் தலைவர். இந்தியாவின் மாபெரும் தலைவர்களில் ஒருவராக வரலாற்றில் அவர் இடம் பெறுவார்'' என்று இலங்கை அரசு கட்டுப்பாட்டிலுள்ள 'டெய்லி நியூஸ்' பத்திரிகை குறிப்பிட்டது.

''இந்திரா காந்தியின் மரணம் தெற்கு ஆசியாவையே அதிர்ச்சி அடையச் செய்து விட்டது'' என்று அங்குள்ள 'தி சன்' பத்திரிகை கூறியுள்ளது.

''அவர் உயிரோடு இருந்தவரை நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் அவரது செல்வாக்கு நமக்கு உறுதி அளிப்பதாக இருந்தது. நமது ஆட்சியுரிமையை அவர் மதித்தார். பாக் ஜலசந்தியில் தீரச் செயல் எதையும் நடத்தாத அளவுக்கு முதிர்ச்சி பெற்றவர் அவர். இந்தியாவில் நிலவும் நிச்சயமற்ற தன்மை இலங்கையிலும் சோதனைகளை ஏற்படுத்தலாம்'' என்று

# இந்திரா பெற்ற விருதுகள்

அன்னை இந்திரா காந்தியை அணி செய்த பட்டங்கள் ஏராளம், எண்ணற்றவை. ஒப்பற்ற கவுரவ பட்டங்கள் பல ஓடிவந்து அவரை ஒட்டிக் கொண்டன.

பங்களாதேஷ் நெருக்கடியில் பாங்கான தலைமைக்காக 1972ல் அன்னை இந்திராகாந்திக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.

பங்களாதேஷை விடுவித்ததற்காக, மெக்சிகன் அக்காதமி விருது அதே ஆண்டில் வழங்கப்பட்டது.

உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டுப் பதக்கத்தை 1973ல் பெற்றார்.

1976ல் அமெரிக்காவின் 'அன்னையர் விருதி'னைப் பெற்றார்.

1967, 1968ஆம் ஆண்டுகளில் யேல் பல்கலைக்கழகம் ஹொலந்து நினைவுப் பரிசளித்துக் கவுரவித்தது.

1971ல் பிரெஞ்சு நிறுவனம் நடத்திய பொதுமக்கள் கருத்துக் கணிப்பு, புகழ் மிக்க பெண்மணி இந்திரா காந்தி எனத் தெரிவித்தது.

அதே ஆண்டில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட கேலப் வாக்கெடுப்பு உலகத்திலேயே மிகப் புகழ்வாய்ந்த நபர் இந்திரா காந்தி என நிறுவியது.

1982 ஆகஸ்ட் 2ல் கிழக்கு-மேற்கு உறவுக்கான ஊதாண்ட் விருது நியூயார்க்கில் வழங்கப்பட்டது.

## பயிற்றுவித்த ஆசிரியர்களின் பாராட்டுகள்



இந்திரா, புனாவில் ஒரு பள்ளியில் படித்துவந்தார். அந்தப் பள்ளியை நடத்தி வந்த திருமதி வக்கல், சிறு வயதிலேயே இந்திராவிடம் காணப்பட்ட ஆர்வத்தையும் சுறுசுறுப்பையும் பற்றிக் கூறியுள்ளார்.

''அந்த வயதில் இந்திரா சுறுசுறுப்பாகவும் சிரத்தை மிக்கவளாகவும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொண்டவளாகவும் படபடப்பற்ற அமைதியான மனநிலையுடையவளாகவும் இருந்தாள். தன் கையால் வேலை செய்வதை இந்திரா என்றுமே அவமானமாகக் கருதியதில்லை.''

இந்திரா கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் சாந்திநிகேதனத்தில் பயின்றுவந்த போது, அவரது பேராசிரியர் ஒருவர் சூட்டிய புகழ்மாலை:

''சாதாரண உடையணிந்து எளிமையான தோற்றமளித்த இந்திரா என்னை மிகவும் கவர்ந்தாள். தனக்கென்று தனிச் சலுகைகள் எதுவும் எதிர்பார்ப்பதேயில்லை. பிறருக்குச் சமமாகவே தன்னை நினைத்துக்கொள்வதில் மகிழ்ச்சியுற்றாள். தன் உடைகளைத் தானே துவைத்துக் கொண்டாள். தன் படுக்கையைப் போட்டுக் கொண்டாள். காலையில் தினம் பிரார்த்தனைக் கூட்டத்திற்குத் தவறாமல் வந்தாள். அவளது நடத்தையில் குற்றமே கண்டுபிடிக்க முடியாது. வீட்டுப்பாடத்திலும் வகுப்புப் பாடத்திலும் எப்போதும் தீவிர கவனம் செலுத்தினாள். சரியான விடைகளை எழுதி அவள் எல்லாப் பரீட்சைகளிலும் நல்ல மார்க்குகள் எடுத்தாள். தந்தையின் கையெழுத்தைப் போலவே அவளுடைய கையெழுத்தும் மணிமணியாக இருக்கும்.''

---

'தி டெய்லி நியூஸ்' கருத்து தெரிவித்துள்ளது.

''திருமதி இந்திரா காந்தி 'ஆசியாவின் பாதுகாவலர்'' என்று இலங்கை கம்யூனிஸ்ட் பத்திரிகையான 'அத்தா' (உண்மை) வர்ணித்துள்ளது.

பிரதமர் இந்திராகாந்தியின் மரணம் குறித்து வருத்தம் தெரிவித்து பாகிஸ்தான் பத்திரிகைகள் தலையங்கம் தீட்டியுள்ளன.

''அவரது படுகொலை இந்தியாவை நிலைகுலைய வைத்துவிட்டது. அவரது தந்தை ஜவஹர்லால் நேரு மரணத்தை விடவும் அதிக பாதிப்பை இந்திரா காந்தியின் மறைவு ஏற்படுத்தும்'' என்று 'டாண்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

''இந்திரா காந்தியைப் போன்று செல்வாக்கும் தகுதியும் நிறைந்த ஓர் தலைவரை இந்தியாவில் இப்போது காண முடியவில்லை'' என்று 'நவாயி வக்த்' என்ற உருது பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

''நாட்டுக்கு வெளியே கட்டவிழ்த்து விடப்பட்ட இந்திய விரோதப் பிரச்சாரத்தின் இறுதி விளைவே திருமதி இந்திரா காந்தியின் படுகொலை'' என்று சோவியத் பத்திரிகையான 'சோவெத்ஸ்கயா ரோஸ்ஸியா' குறிப்பிட்டுள்ளது.

# அனைத்துக் கட்சியினர் அஞ்சலி!

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் மாபெரும் அமைதி ஊர்வலமும், இரங்கற் கூட்டமும் சென்னையில் 4-11-84 ஞாயிறன்று நடைபெற்றன.

அன்று மாலை தேனாம்பேட்டை காமராசர் திடலின் அருகிலிருந்து புறப்பட்ட அமைதி ஊர்வலம் அண்ணா சாலை, வாலாஜாசாலை, காமராசர் சாலை வழியாகக் கடற்கரைச் சீரணி அரங்கை அடைந்தது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசீய காங்கிரஸ்(இ), திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக், ஜனதா கட்சி, பாரதீய ஜனதா கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், தமிழரசுக் கழகம், காங்கிரஸ்(ஜெ), கிருஸ்துவ ஜனநாயக முன்னணி, திராவிடர் கழகம் (திருவாரூர் தங்கராசு), அம்பேத்கார் மக்கள் இயக்கம், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி, குடியரசுக் கட்சி, தமிழ்நாடு முஸ்லீம் லீக், தலித் மஸ்தூர் கிசான் கட்சி, தேசிய சஞ்சய் மஞ்ச் முதலான பல்வேறு கட்சிகளும் இந்த ஊர்வலத்திலும் சீரணி அரங்கில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்திலும் பங்கேற்றன.

இரங்கற் கூட்டம் தொடங்குமுன், கலைமாமணி டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன், கலைமாமணி பித்துக்குளி முருகதாஸ் உள்ளிட்ட இசைவாணர் பலரும் பிரதமர் இந்திரா காந்தி மறைவு பற்றிய பாடல்களைச் சோகமயமாகப் பாடினர்.

பின்னர், அனைத்துக் கட்சிகளின் சார்

**சென்னை கடற்கரையில் நடந்த அனைத்துக் கட்சி இரங்கல் கூட்ட மேடையில் தலைவர்கள்**





பில் இரங்கல் தீர்மானம் படிக்கப்பட்டது. இத்தீர்மானத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு எம்.பழனியாண்டி படித்தார்.

தீர்மான விவரம் வருமாறு:

'உலக அமைதிக்குப் பாடுபட்டுவந்த தலைவர்களில் தலைசிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தவரும், கூட்டுச் சேரா நாடுகளின் பெருமைக்குரிய தலைவராக விளங்கியவரும், இந்தியப் பெருங்குடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவருமான இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் படுகொலைக்கு ஆளான செய்தி நம் அனைவரையும் துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. இதிலிருந்து மீள முடியாமல், அனைவரும் துன்பக் கடலில் தத்தளித்துக் கொண்டு இருக்கிறோம்.

'மறைந்த இந்திரா காந்தி அவர்கள், பண்டித நேரு பெருமான் ஏற்றி வைத்த ஜனநாயக ஒளிவிளக்கு எக்காரணங்களைக் கொண்டும் அணைந்து போகாமல் இருக்கப் பாடுபட்டு வந்தார்.

'மன்னர்களுக்கு மானியம் அளித்து வந்த முறையை அடியோடு ஒழித்தார். சாதாரண மக்களின் நலன் கருதி, பாங்குகளைத் தேசிய மயமாக்கினார். நலிந்தோருக்கு நல்வாழ்வு நல்க 20 அம்சத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

'இலங்கைவாழ் தமிழர்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்பதற்காக அரும் பெரும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டார். எல்லாத் தரப்பினராலும் போற்றத்தக்க வகையில் அறிவுத் திறன், ஆற்றல்திறன், நெஞ்சுறுதி, செயல்ஊக்கம் விடாமுயற்சி போன்ற நற்பண்புகளைச் சிறப்பாகப் பெற்றுத் திகழ்ந்தார்.

'இப்படிப்பட்ட அருமை பெருமைகளுக்கெல்லாம் உறைவிடமாக விளங்கிய இந்திரா காந்தியை, மனிதப் பண்பற்ற - இழிதன்மை கொண்ட கயவர்கள் சுட்டுக் கொன்றது காட்டுமிராண்டித்தனமானது. மிருக வெறித் தன்மை கொண்டது. கண்டிக்கத்தக்கது.

'இந்திரா மறைந்து விட்டாலும் அவர் ஊட்டிய உணர்வுகளும், கொள்கைகளும், தீட்டிய திட்டங்களும் நம் எதிரே நிற்கின்றன.

'நல்வாழ்வு, அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒருமைப்பாடு ஆகியவற்றை நிலைநாட்ட நாம் அனைவரும் ஒருங்கிணைந்து நின்று தொடர்ந்து பாடுபடுவோமாக!

'ஜனநாயகப் பண்புகளையும், முறைகளையும் காப்போமாக. இனம், மதம், சாதி, கட்சி ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் சண்டை சச்சரவுகளைக் களைவோமாக! உலக அமைதிக்குப் பாடுபடுவோமாக!

'இத்தகைய சீரிய உணர்வுகளோடு இந்திராகாந்திக்கு இந்த இரங்கல் கூட்டம் தலைவணங்கி இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

'அருமை அன்னையை இழந்து வருந்தும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இக்கூட்டம் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.'

மேற்கண்ட தீர்மானத்தைத் திரு பழனியாண்டி படித்தார்.

பிறகு அப்பெருங் கூட்டத்தினர் 2 நிமிட நேரம் மவுனமாக நின்றார்கள்.

அதன் பிறகு தமிழகக் காவல் துறை இசைக் குழுவினர் சோக இசையை இசைத்தனர்.

— இராசேந்திரன்





உறுதியும் பலமும் பெற இறைவனிடம் வேண்டிக் கொள்வோமாக.''

**—முன்னாள் பிரதமர் திரு சரண்சிங்**

"திருமதி இந்திரா காந்தியின் படுகொலையை இந்திய மக்கள் அனைவரோடும் சேர்ந்து நானும் கண்டிக்கிறேன். வளர்ந்து வரும் பயங்கரவாதம் பைத்தியக்காரத்தனத்தைவிட வேறல்ல''.

**—ஜனவாடி தலைவர் திரு சந்திரஜித் யாதவ்**

''இந்தக் கோழைத்தனமான செயலை அனைவரும் கண்டிக்க வேண்டும். அவரது ஆன்மா அமைதி பெறுமாக''.

**—முன்னாள் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய்**

''திருமதி காந்தியின் மரணம் நாட்டுக்கும் அணிசேரா உலகுக்கும் பேரிழப்பாகும். நாடு நெருக்கடியான கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவரது மரணம் மேலும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.''

**—காங்கிரஸ் (எஸ்) தலைவர் திரு சரத்பவார்**

''திருமதி இந்திராகாந்தியின் படுகொலையால் தோன்றியுள்ள துயரமான நிலைமையை ஒற்றுமையோடும் அமைதியாகவும் நாடு சமாளிக்க வேண்டும்.''

**—ஜனதா தலைவர் திரு எஸ். எம். ஜோஷி**

# இந்தியத் தலைவர்களின் இரங்கல்

திருமதி காந்தியின் படுகொலை தேசபக்தியுள்ள ஒவ்வொரு இந்தியனையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி, நிலைகுலையச் செய்துள்ளது.

நாட்டில் இப்படிப்பட்ட படுகொலை நடைபெறுவதற்கு நாமெல்லாம் வெட்கமும் மிகுந்த வேதனையும் படவேண்டும். நான் அரசியலில் அவரை எதிர்த்து வந்துள்ள போதிலும், நாட்டின் வரலாற்றில் அவர் மிக முக்கிய பணியாற்றியுள்ளார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தப் படுகொலை ஒரு தனிப்பட்ட நபருக்கு எதிராக மட்டும் செய்யப்பட்டதல்ல; நாடு முழுவதற்கும் எதிராகச்செய்யப்பட்டது. இந்தக் கோழைத்தனமான கொலையை நானும் எனது கட்சியிலுள்ள நண்பர்களும் மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நம்நாட்டின் வரலாற்றில் இது ஒரு துக்ககரமான நாள். வளர்ந்துவரும் இத்தகைய பயங்கரவாதம், நாம் வளர்த்துவரும் ஜனநாயக லட்சியங்கள் அனைத்துக்கும் மிகப் பெரிய அபாயமாக விளங்குகிறது.

மறைந்த பிரதமரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக. அவரது குடும்பத்தினர் அவரது இழப்பைத் தாங்கிக் கொள்ளும்

''நமது நாட்டில் ஏற்பட்டுள்ள மிகத் துயரகரமான சம்பவம்.''

**—அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சிச் செயலர் திரு எஸ். ஏ. டாங்கே**

''திருமதி காந்தி இந்தியாவின் ஐயத்திற்கு இடமில்லாத தலைவர்; உலகத்தின் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவர். இந்தியாவும் உலகமும் அவரிடமிருந்து நிறைய எதிர்பார்த்தன. ஆனால் கடவுளின் திருவுளத்தை மாற்ற முடியாது.''

**—கர்நாடக ஆளுநர் திரு ஏ. என். பானர்ஜி**

''திருமதி காந்தி கோழைத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டது மிகவும் அதிர்ச்சி தருவதாகும். அவர் தனது தந்தை நேருவிடமிருந்து போற்றத்தக்க பல குணங்களைப் பெற்றிருந்தார். மிகக் கடினமான சூழ்நிலைகளைத் தைரியத்துடன் சமாளிக்கும் மிக அபூர்வமான பெண்மணி அவர்.''

**கர்நாடக முதல்வர் திரு ராமகிருஷ்ண ஹெக்டே**

''மகாத்மா காந்தியின் படுகொலைக்குப் பிறகு நம் நாட்டில் பொதுவாழ்வில் நிகழ்ந்துள்ள மிகத் துக்ககரமான நிகழ்ச்சியாகும் இது. பயங்கரவாதத்தை நாம் அனைவரும் தடுத்தாக வேண்டும். இந்தக் கொடூரமான படுகொலையை நாடு தாங்கிக் கொள்ள வேண்டும். ஒற்றுமையாக இருப்பதன் மூலம்தான், நம்மை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை நாம் சமாளிக்க முடியும்.''

**—ஜனதா கட்சித் தலைவர் திரு சந்திரசேகர்**

''துக்ககரமான சூழ்நிலையில் பிரதமர் துயரமான வகையில் மரணமடைந்திருப்பது ஒரு தேசிய சோக நிகழ்ச்சியாகும். துப்பறியும் இலாகாவால் மிகவும் கவனமான முறையில் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய தனது பாதுகாப்புக் காவலர்களாலேயே பிரதமர் படுகொலை செய்யப்படுவது பரிதாபகரமானதாகும்.

''அவரது மரணம், எல்லா அரசியல் கட்சித்தலைவர்களுக்கும் தங்களது அற்பவேறுபாடுகளைவிட்டு நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டினையும் கட்டிக்காக்க விடப்பட்ட அறைகூவலாகும். அரசியல் வேறுபாடுகளை மறந்து, நாட்டின் ஒருமைப்பாட்டைப் பற்றி நினைப்பதே எல்லா அரசியல் தலைவர்கள் மற்றும் சரியாகச் சிந்திக்கும் மக்களின் பொதுவான அக்கறையாக இருக்க வேண்டும்.''

**காங்கிரஸ் (ஜெ) தலைவர்**
**திரு ஜெகஜீவன்ராம்**

''இன்று நடந்துள்ளது இந்தியாவை நேசிக்கிற, அமைதியைப் போற்றுகிற அனைவராலும் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. சொந்த முறையில் எனக்கிருக்கும் வருத்தத்தோடு, பயங்கரமான இந்த வன்செயலை மற்ற இந்திய மக்களோடு சேர்ந்து நானும் கண்டிக்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடையவும், சங்கடங்கள் நிறைந்த இந்தியாவில் அமைதி மீளவும் பிரார்த்திப்போமாக.''

**—திருமதி மேனகா காந்தி**

''திருமதி காந்தியின் படுகொலை நாடு முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அவரோடு நாங்கள் பல கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தோம். எனினும் அவர் பல வழிகளிலும் குறிப்பிடத்தக்க நபர் என்பதை அவரது எதிரிகளும் ஏற்றுக் கொள்வார்கள்.

''தைரியமான முடிவுகள் எடுக்க அவர் தயங்கியதில்லை. அவை சில நேரங்களில் சரியாக இல்லாமல் இருந்திருக்கலாம். பயன்தரும் என்று கருதிய முடிவுகளை அவர் மேற்கொண்டார். அதற்காகப் பலரின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொள்ள நேர்ந்தது பற்றி அவர் கவலைப்படவில்லை.

''தேசமே துக்கத்திலும் நெருக்கடியிலும் இருக்கும் இந்த நேரத்தில் மக்கள் ஒற்றுமையாக இருக்கவும், அமைதியையும் வகுப்பு நல்லுறவையும் எப்பாடுபட்டேனும் காத்திடவும் பாரதிய ஜனதா கட்சி கேட்டுக் கொள்கிறது.''

**—பாரதீய ஜனதா கட்சித் தலைவர்**
**திரு ஏ. பி. வாஜ்பாய்**



## தீர்க்க தரிசனத்துக்கு ஒரு நேரு

இந்திரா சிறுமியாக இருந்தபோது நேரு பல கடிதக் கட்டுரைகளை அவருக்கு வரைந்திருக்கிறார். ஒரு கடிதத்தில் நேரு குறிப்பிட்டது வருமாறு:

''மன உறுதியுடன் இருந்து விட்டால் நீ எதைப் பற்றியும் கவலைப்படத்தேவையில்லை. ஒருவருக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. பின்னர் வெட்கித் தலை குனியும்படி எதையும் செய்யமாட்டாய்.

''சின்னஞ் சிறு கண்மணியே, இந்தியாவின் சேவையில் நீ தீரமிக்க வீராங்கனையாகத் திகழ வேண்டும் என்று வாழ்த்திவிட்டு விடைபெறுகிறேன்.''

நேரு வாழ்த்தியது போலவே, இறுதி வரை வீராங்கனையாக விளங்கி, இந்திய நாட்டுக்காகத் தனது இன்னுயிரையும் இரத்தத் துளிகளையும் வழங்கியிருக்கிறார் இந்திரா.

''திருமதி காந்தியின் மரணத்தால் இந்தியா ஒரு மாபெரும் தேசபக்தரையும் தலைசிறந்த தலைவரையும் இழந்துவிட்டது. ஏறத்தாழ 20 ஆண்டுக்காலம் இந்திய அரசியல் அரங்கில் அவர் மாபெரும் சக்தியாகத் திகழ்ந்தார். அவரது மறைவால் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது''.

**— பாரதீய ஜனதா கட்சிப் பொதுச் செயலர்**
**திரு. எல். கே. அத்வானி**

''இந்தியாவை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நீண்ட காலமாகச் செயல்பட்டு வரும் ஏகாதிபத்திய ஏஜண்டுகளின் ஆதரவு பெற்ற சமூகவிரோத பயங்கரவாதிகளின் செயல் இது என்பது தெளிவு. இப்படிப்பட்ட பயங்கர நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்க அனுமதிக்கப்படுமானால், குழப்பம்தான் ஏற்படும்.''

**—இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)**



* உலகம் முழுவதும் ஒரு குடும்பமே என்னும் உணர்வுடன் வாழ வேண்டும். இந்தக் கருத்தை இளவயதிலேயே குழந்தைகளின் மனத்தில் பதிக்கச் செய்ய வேண்டியது அவசியம்.

* இந்தியாவில் மேற்கத்திய நாடுகளின் கலாசாரம் மீது மோகம் வளர்வது குறித்தும், சாதிபாகுபாடுகள் புதுக்கோணத்தில் பெருகுவது குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

* விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் பொருளாதார வளர்ச்சி வேகமாக ஏற்பட உதவுபவை. நாட்டின் பாதுகாப்பு பத்திரமாக இருந்தால்தான் நாடு முன்னேற்றம் காண முடியும்.

* கல்வியின் பலன் பெருந்திரளான மக்களுக்குப் போய்ச் சேருவதோடு, பின் தங்கிய மற்றும் அடித்தட்டு மக்களின் நிலையை மேம்படுத்துவதாகவும் இருந்தால்தான் அர்த்த முள்ளதாக இருக்கும். —திருமதி இந்திரா

''கருப்புச் சக்திகளும் பயங்கரவாதமும் படுகொலை அரசியலும் அரசியல் அரங்கில் நுழைந்து, நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் அழித்து, குழப்பத்தை உண்டாக்கப்பார்க்கின்றன என்பதற்கான எச்சரிக்கைதான் இது. அத்தகைய சக்திகளை அழித்தொழிக்கும் தருணம் வந்துவிட்டது.''

—இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலர்
திரு சி. ராஜேஸ்வரராவ்

''திருமதி காந்தியின் மரணம் நாட்டுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்''

—ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர்
திரு. ஜி. எம். ஷா

''இது ஒரு கோழைத்தனமான செயல். மிகவும் கவலையளிக்கும் செய்தி. சரியாகச் சிந்திக்கும் மக்கள் அனைவராலும் கண்டிக்கத்தக்கது. இத்தகைய செயல்களை மக்கள் கண்டிக்காவிட்டால், நாம் விரும்பும் ஜனநாயக அரசியல் ஆபத்துக்குள்ளாகிவிடும்.''

—மேற்கு வங்க முதல்வர் திரு ஜோதிபாசு

''நாடு இந்த நெருக்கடியான கட்டத்தில் பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.''

—திரு ஐ. கே. குஜ்ரால்

''நாட்டை ஒற்றுமையாக வைத்திருக்கத் திருமதி காந்தி பாடுபட்டார். சிறு சிறு வேறுபாடுகளை மறந்து அவரது லட்சியங்களின் அடிப்படையில் நாட்டைக் கட்டிக் காப்பது ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும்.''

முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர்
திரு பி. டி. ஜட்டி

''பிரதமர் இந்திராகாந்தியின் படுகொலையைக் கேட்டு நான் பெரும் அதிர்ச்சிக்குள்ளானேன். அனைவரும் கண்டிக்கத்தக்க காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் இது. இந்த நெருக்கடியான கட்டத்தில் நாட்டையும் மக்களையும் கடவுள் காப்பாற்றுவாராக! நாம் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்போமாக!''

—தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்
திரு எம். பக்தவத்சலம்

''சரியாகச் சிந்திக்கும் அனைவராலும் கண்டிக்கத்தக்க கோழைத்தனமான செயல் இது. பிரதமர் இந்திராகாந்தியின் மறைவால் இந்தியா தனது செல்ல மகளை இழந்துவிட்டது; நாடு ஓர் இணையற்ற ராஜதந்திரியை இழந்துவிட்டது. உலகம், அமைதிக்கும் சுதந்தரத்துக்கும் பாடுபட்ட ஒப்பற்றதோர் வீரரை இழந்துவிட்டது. அன்னாரின் குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

— ஆந்திரப் பிரதேச முதல்வர்
திரு என். டி. ராமராவ்

''நாட்டைப் பத்திரமாக வழிநடத்திச் சென்ற வழிகாட்டி நட்சத்திரத்தை இந்தியா இழந்துவிட்டது. அன்புக்குரிய தலைவரை நாம் இழந்து விட்டோம். உலக அமைதிக்குப் பாடுபட்ட தலைவரை உலகம் இழந்து விட்டது.''

—மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்
திரு க. இராசாராம்

''இந்தியா முழுவதையும் உலகெங்கும் உள்ள மக்களையும் ஆழ்ந்த துக்கத்தில் வீழ்த்தியுள்ள மிகவும் கோழைத்தனமான செயல்.''

—மேதகு கேரள ஆளுநர்
திரு பி. இராமச்சந்திரன்

தொகுப்பு :

**டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி**

## முத்திய அமைச்சரவை

## இரங்கல்

புதிய பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை, இந்திராகாந்தியின் மறைவு குறித்துப் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது:

''நாட்டின் மாபெரும் தலைவர் பிரதமர் இந்திரா காந்தியின் துயரமிக்க மரணத்திற்கு, இந்த அமைச்சரவைக் கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

''நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் அயராது பாடுபட்டவரின் மறைவால் நாடு முழுவதும் அநாதையாகிவிட்டது. அணி சேரா இயக்கம் ஒரு மாபெரும் தளபதியை இழந்துவிட்டது. உலகம் ஒரு மாபெரும் ராஜதந்திரியைப் பறிகொடுத்துவிட்டது. வெளி ஆக்கிரமிப்பும் நெருக்கடியும் சூழ்ந்த மிக இக்கட்டான காலகட்டத்தில் நாட்டுக்கு வழிகாட்டி, ஐக்கியப்பட்ட, பொருளாதாரத்தில் உறுதிப்பட்ட நாட்டை உருவாக்கினார். இன்று இந்தியா தற் சார்பில் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.

மறைந்த நமது மாபெரும் தலைவரின் நினைவுக்கு மரியாதை செலுத்தும் அதே நேரத்தில், அவர் தமது இறுதி மூச்சுவரை பாடுபட்ட நாட்டை நிர்மாணிக்கும் மகத்தான பணியில் தொடர்ந்து செல்ல நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்கிறோம்.

திருமதி இந்திரா காந்தி இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் வாழ்ந்தார். உயிரை விட்டார். அமைதி, வகுப்புகளுக்கிடையே நல்லுறவு, ஒற்றுமை இவற்றைப் பராமரிக்கும்படி நாடு முழுவதையும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்''.

---

*அரசு சிறப்பிதழ்:*

"இந்திய அரசு, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 1984 அக்டோபர் 31ந் தேதி புது டில்லியில் காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது'' என்று சிறப்பு அரசிதழ் (கெஜட்) வெளியிட்டது. உள்துறை அமைச்சகச் செயலர் திரு எம்.எம்.கே. வாலி அதில் கையெழுத்திட்டிருந்தார்.





# 'எனக்கு மட்டுமல்ல நாட்டுக்கே தாய்!'

## -பிரதமர் புகழஞ்சலி

இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு, புதிய பிரதமராகப் பொறுப்பேற்ற அவரது மூத்த மகன் ராஜீவ் காந்தி நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தி:

''நமது உணர்ச்சிகள் நம்மை மேற்கொள்ளுமாறு நாம் விடக்கூடாது. உணர்ச்சி வசப்படுவது நிதானமிழக்கச் செய்யும்.

''நாடு என் மீது மாபெரும் பொறுப்பைச் சுமத்தியுள்ளது. நாட்டு மக்களுடைய ஆதரவு, ஒத்துழைப்பின் மூலம் மட்டுமே நான் அதனை நிறைவேற்ற முடியும்.

''ஆழ்ந்த துயரம் கொடுக்கும்தருணம் இது. இத்தருணத்தில் நாம் நிதானம் இழக்காமல் இருப்பது மிகவும் முக்கியம். இந்தத் துயரமிக்க இக்கட்டான நிலையை உறுதி, தீரம், விவேகம் மூலம் மட்டுமே சமாளிக்க வேண்டும். அது நம்மால் முடியும்.

''நாட்டின் எந்தப் பகுதியிலாவது நடக்கும் வன்முறையல்லாது வேறு எதுவும் நமது பேரன்புக்குரிய இந்திரா காந்தியின் ஆன்மாவைக் காயப்படுத்தாது. நாம் இந்த நேரத்தில் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் சரியான பாதையில் இருக்க வேண்டியது மிக மிக அவசியம். இந்திரா காந்தி இறந்து விட்டார். ஆனால் அவரது ஆன்மா வாழ்கிறது. இந்தியா வாழ்கிறது. இந்தியா அழிவற்றது. இந்தியாவின் ஆன்மா அழிவற்றது.

''நாடு தன் பொறுப்புகளை உணர்ந்து தனது சுமையை உறுதியுடனும், தீரத்துடனும் தாங்கிக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

''இந்திரா காந்தி, இந்தியப் பிரதமர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவர் எனக்கு மட்டுமின்றி, நாடு முழுவதற்குமே தாயாக விளங்கினார். கடைசி சொட்டு இரத்தம் இருக்கும் வரை அவர் இந்திய மக்களுக்காகப் பாடுபட்டார்.

''இந்தியாவின் அபிவிருத்திக்காக அவர் எவ்வாறு அயராத அர்ப்பணிப்புடன் பணியாற்றினார் என்பதை நாடு அறியும். ஐக்கியப்பட்ட, அமைதியான, வளமான இந்தியா அவரது இதயத்துக்கு எவ்வளவு அருமையாக இருந்தது என்பதை நாட்டு மக்கள் உணர்வார்கள். இந்தியர்கள் அனைவரும் மத, மொழி, அரசியல், வேறுபாடின்றி விரோதமோ வெறுப்போ அற்ற சூழ்நிலையில் ஒரு பெரும் குடும்பமாக வாழும் இந்தியாவை அவர் விரும்பினார். அவரது அகால மரணத்தால் அவரது பணி நிறைவேறாமல் உள்ளது. இந்தப் பணியை நிறைவேற்றி வைப்பது நமது பொறுப்பாகும்.''

## சூரிய சந்திரன் உள்ளவரை!

மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் முகத்தைக் கடைசியாக ஒருமுறை பார்க்க இறுதி ஊர்வலப் பாதையின் இருமருங்கிலும் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் திருமதி இந்திரா மீதான தங்களின் மதிப்பை, தங்கள் அன்பை வெளிப்படுத்த பல வகையான முழக்கங்களை முழங்கினர்.



"இந்திரா காந்தி அமர் ரஹே" என்றும் "தேஷ்கி மாதா இந்திரா காந்தி (இந்திரா இந் நாட்டின் அன்னை) என்றும் பலர் முழக்கம் எழுப்பினர்.

மற்றும் பலர் "ஜப் தக் சூரஜ் சாந்த் ரஹேகா, இந்திரா காந்தி தேரா நாம் ரஹேகா" (சூரியன், சந்திரன் உள்ளவரை இந்திராவின் பெயர் நிலைத்திருக்கும்") என்று வானளாவ முழங்கினர்.



# ஜனநாயக உலகத்தின் இழப்பு..



## அனைத்து நாட்டுத் தலைவர்கள் இரங்கல்

இந்திரா காந்தியின் படுகொலையை உலக தலைவர்கள் கண்டித்ததுடன், இந்தியாவுக்கும் அணிசேரா இயக்கத்திற்கும் அவர் வீரமிக்க தலைவராக விளங்கினார். என்று புகழாஞ்சலி செலுத்தினார்கள்.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஜியா-உல்-ஹக், ''ஆழ்ந்த அதிர்ச்சியும் துயரமும்'' வெளியிட்டார். ''இந்தியா பாகிஸ்தான் உறவில் திருமதி இந்திரா காந்தி ஒரு நெருக்கடியான தீர்க்கமான பங்காற்றினார்''.

பாகிஸ்தான் அமைச்சரவைகூடி அனுதாபம் தெரிவித்ததுடன், மூன்று நாள் நாடு முழுவதும் துக்கம் அனுசரிப்பதாகவும் அறிவித்தது.

''இந்தக் கீழ்த்தரமான, காட்டுமிராண்டித்தனமான செயல், அந்தக் குற்றம் இழைத்தவர்களின் கோழைத்தனத்தையும் காட்டுகிறது'' என்றார் பங்களாதேஷ் அதிபர் லெப்டினென்ட் ஜெனரல் எச்.எம். எர்ஷத்.

''இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் மட்டும் ஏற்பட்ட இழப்பல்ல இது. ஜனநாயகத்தை விரும்பும் எல்லா மக்களுக்கும் ஏற்பட்ட இழப்பு'' என்றது தாய்லாந்து அரசு.

''கோழைத்தனமான படுகொலை. இந்திய மக்கள் ஒரு மாபெரும் ராஜதந்திரியை இழந்து விட்டார்கள்'' -டச்சு அரசு.

''இந்தப் பயங்கரத்தை ஆஸ்திரேலிய அரசு கண்டிக்கிறது'' - ஆஸ்திரேலிய பிரதமர் பாப் ஹாக்.

ஆப்பிரிக்க நாடுகள் அதிர்ச்சியடைந்தன. வானொலிகள் தங்களது வழக்கமான நிகழ்ச்சிகளை நிறுத்தி, இந்த மரணச் செய்தியைத் தெரிவித்தன. கீன்யாவின் அதிபர் டேனியல் அராம்மோய், டான்சானிய அதிபர் டாக்டர் ஜூலியஸ் நைய்யரே மற்றும் பலர் தங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

''உலக பயங்கரத்தின் நேரடி விளைவு இது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' — இஸ்ரேல் அரசு.

இராணியப் பிரதமர் முசாலி தனது அனுதாபத்தைத் தெரிவித்தார். ஐக்கிய அரபு எமிரேட்டுகள் அதிபர் ஷேக் சையத் கண்டனம் தெரிவித்தார். ஆறு வளைகுடா கூட்டு நாடுகளின் ஷேக்குகள் இளவரசர்கள் மற்றும் பிரதமர்கள் அனுதாபம் தெரிவித்தனர். குவைத் அதிபர் ஷேக் ஜாபர் அல்-அகமது அல்-சாபா கண்டனம் தெரிவித்தார்.

''இந்தியாவும் உலக மக்களும் ஒரு மாபெரும் தலைவரை இழந்துவிட்டார்கள். அமைதிக்குப் பாடுபட்ட ஒருவரை வன்முறை மீண்டும் பலி வாங்கிவிட்டது''— பிலிப்பைன் அதிபர் ஃபெர்டினான் மார்போஸ்.

''உலகத்தைக் குருதியால் கறைப்படுத்தும் தொடர் வன்முறைகளில்இதுவும் ஒன்று. இந்தச் செய்தி உலகெங்கும் அச்சத்தையும் துயரத்தையும் தோற்றுவித்துள்ளது.'' — போப் ஜான் இரண்டாவது பால்.

''இது இந்தியாவுக்கு மட்டும் ஈடு செய்ய முடியாத இழப்பல்ல. அணிசேரா நாடுகளின் இயக்கத்திற்கும் சர்வதேச சமுதாயத்திற்கும் பலத்த அடி''—இலங்கை அரசு.இந்திரா காந்தி இறந்த செய்தியைச் சொல்ல இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் குறுக்கீடு செய்ததுடன் வழக்கமான நிகழ்ச்சிகளையும் ரத்து செய்தது.

''இந்திரா காந்தியின் மறைவு இந்தியாவுக்கும், உலகத்துக்கும் ஏற்பட்ட இழப்பாகும். இலங்கையில் வாழும் தமிழர்கள் தங்கள் இதயத்தில் இந்திராகாந்திக்குச் சிறப்பிடம் அளித்துள்ளார்கள். அணி சேரா நாடுகளின் தலைவர் என்ற முறையில் ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை ஒளியாக அவர் விளங்கி வந்தார்''—தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் திரு சிவசிதம்பரம்.



## சுயசரிதை எழுதாதது ஏன் ?

''எவர் மனத்தையும் புண்படுத்த விரும்பாததால் நான் சுயசரிதை எழுதவில்லை!''

கடந்த 30 ஆண்டுகளாக நெருங்கிப் பழகி வந்த தனது லண்டன் தோழி திருமதி மேரி சேடனிடம் திருமதி இந்திரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1977 தேர்தலில் தோல்வியுற்ற பின் 6 அல்லது 7 பதிப்பாளர்கள் சுயசரிதை எழுதுமாறு இந்திராவை வற்புறுத்தியதன் பேரில் அவர் ஒப்புக்கொண்டிருந்தார்.

பின்னர் திருமதி இந்திராவுக்கு எதிராக 'ஷா கமிஷன்' அமைக்கப்பட்டது. 3 மாதங்களுக்குப் பிறகு நான் சுயசரிதை எழுதப் போவதில்லை என்று கூறிவிட்டார்.

''நான் உண்மையை எழுதவேண்டும். அப்படியானால் பல்வேறு மனிதர்களின் மனத்தைப் புண்படுத்துவதாக அது அமையும். அதனால் சுயசரிதை எழுதாமல் இருப்பதே நல்லது'' என்று இந்திரா கூறியதாகத் திருமதி மேரி தெரிவித்தார்.

''திருமதி இந்திராகாந்தி நீண்ட காலம் இந்தியாவை மிகச் சிறந்த முறையில் வழி நடத்தினார். அவர் இந்தியாவிலும் அணி சேரா இயக்கத்தின் தலைவர் என்ற முறையிலும் மிகவும் மரியாதைக்குரியவராகத் திகழ்ந்தார்'' — ஜப்பானிய அரசு.

''இந்தத் துயரச் செய்தி கேட்டு நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். திருமதி இந்திரா காந்தி ஒரு மிகச் சிறந்த இராஜதந்திரி. சீன இந்திய நல்லுறவின் வளர்ச்சிக்கும் சீரமைப்புக்கும் அவர் பயனுள்ள பணியாற்றியுள்ளார்''—சீன அரசு.

''திருமதி காந்தி ஒரு மாபெரும் தலைவராக விளங்கினார். உலகம் முழுதும் புகழ் பெற்று வந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் அரபு உலகத்துடன் இந்தியாவின் நல்லுறவு மிகச் சிறந்த முறையில் இருந்தது. எங்கள் அனுதாபத்தை இந்திய மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்'' -பஹரைன் அரசு.

''திருமதி இந்திரா காந்தியின் அகால மரணத்தால் சோவியத் யூனியன் அதிர்ச்சியடைந்துள்ளது. மிகச் சிறந்த தலைவருக்கு எதிராகக் கிளம்பியுள்ள குற்றவாளிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் சோவியத் யூனியன் இனங்கண்டு வைத்திருக்கிறது. இந்திரா காந்தியின் புகழமிக்க பெயர் வரலாற்றில் என்றென்றும் வாழும்''- சோவியத் ரஷ்யா.

அமெரிக்காவில் அதிகாலையில் இந்த அவலச் செய்தி கிடைத்ததும் அலுவலர்கள் அமெரிக்க அதிபர் ரீகனை நித்திரையிலிருந்து எழுப்பிச் சொன்னார்கள். தான் பலமுறைச் சந்தித்தும், உலகப் பிரச்னைகள் பற்றிக் கடிதப் போக்குவரத்தும் வைத்திருந்த திருமதி காந்தியின் மரணம் தனக்குச் ''சொந்த முறையில் ஆழ்ந்த துயரத்திற்குரியது'' என்றார் ரீகன்.



''இந்த மிருகத்தனமான கொலை பற்றி நான் அதிர்ச்சியும் துயரமும் அடைகிறேன். பயங்கரத்தின் கொடுமை பற்றி நானும் அவரும் அண்மையில் கடிதப் போக்குவரத்து நடத்தினோம். மனித குலத்துக்கு ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்த, சுதந்திரம் விரும்பும் நாடுகளிடையே கூட்டுறவைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாங்கள் ஒத்துக்கொண்டோம். மதியீனமான அவரது படுகொலை, நம்மையெல்லாம் எதிர் நோக்கியுள்ள பயங்கரவாத அபாயத்தையே தெளிவாக நினைவூட்டுகிறது. இந்த அபாயத்தை முறியடிக்கும் நமது உறுதியை நாம் மீண்டும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். பிரதமர் இந்திராகாந்தியின் சாதனைகளும் நினைவும் மனித குலத்துக்கு ஊக்கமளிக்கும் சக்தியாக விளங்கி வருவதை உறுதி செய்ய வேண்டும்.''

அதிபர் ரீகன் மாசாசூசெட்ஸ் அவின்யூவில் உள்ள இந்தியத் தூதரகத்திற்குச் சென்று இரங்கல் செய்திப் பதிவேட்டில் கையெழுத்திட்டார்.

**தொகுப்பு : ராஜா**

## தைரியத்தின் திருவுருவம்



தைரியத்தின் திருவுருவமாகத்தான் திருமதி இந்திராகாந்தி திகழ்ந்து வந்தார். சாவைப் பற்றியோ கொலையைப் பற்றியோ அவர் கிஞ்சித்தும் கலங்கியது இல்லை.

1984 அக்டோபர் மாதம் அயல்நாட்டு நிருபர் ஒருவர் இந்திராகாந்தியைப் பேட்டி கண்டார். உங்களைக் கொல்ல அடிக்கடி முயற்சி நடக்கிறதே? உங்களுக்கு அது அச்சத்தைத் தரவில்லையா?'' என்று கேட்டார்.

அன்னை இந்திரா உறுதிமிக்க தொனியில் பதிலளித்தார். ''இல்லவே இல்லை. எனக்கு அச்சம் என்பதே இல்லை.

''என்னை அடிக்கடி தாக்குகிறார்கள். ஒருவன் துப்பாக்கியால் குறி பார்த்தான். இன்னொரு சந்தர்ப்பத்தில் டில்லியில் ஒருவன் என்மீது கத்தியை எறிந்தான்.

1975 மார்ச் 18ந்தேதி அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு வெளியே குண்டுகள் நிரப்பிய ரிவால்வரை வைத்திருந்ததற்காக, கோவிந் மிஸ்ரா என்ற பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டார். ஒரு தேர்தல் வழக்கில் திருமதி இந்திராகாந்தி சாட்சி சொல்ல வந்த சற்று நேரத்திற்கு முன்னதாக இது நடந்தது.

## சகாப்தம் சாய்ந்தது

ஜவகர்லால் நேரு நைனி சிறைச்சாலையில் இருந்தபொழுது தனது பிரிய மகள் பிரியதர்சினிக்கு (இந்திரா காந்திக்கு)க் கடிதங்கள் எழுதுவது வழக்கம்.

ஒரு கடிதத்தில் நேரு எழுதினார்:

''சரித்திரத்தைப் படிப்பது நல்லதுதான். ஆனால் அதைவிடச் சிறந்தது, அந்தச் சரித்திரம் உருவாக உதவியாக இருப்பது...''

சரித்திரம் படைத்த அந்தத் தந்தை, தன்மகளும் சரித்திரம் படிக்க வேண்டும்; சரித்திரம் படைக்க வேண்டும் என்று விரும்பினார். அவரது எண்ணம் நிறைவேறவே செய்தது.

இந்தியாவின் பிரதமராக இந்திரா காந்தி 1966ல் பதவியேற்றார். சரித்திர நாயகனின் புதல்வி புதிய சரித்திரம் படைக்கத் தொடங்கினார். 18 ஆண்டுகள் அவரது வாழ்க்கை தேசத்தின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தது.



மேடு பள்ளம், சூழ்ச்சிச் சதுரங்கம், கிளர்ச்சிகள் கொந்தளிப்புகள், புயல்கள், பெரும் சூறாவளிகள் .... இத்தனையும் சமாளித்த முத்தனைய தலைவருக்கு கொலையாளியின் துப்பாக்கி தோட்டா முற்றுப்புள்ளி வைத்தது.

தரித்திரர்களை ஈடேற்ற இடையறாது பாடுபட்டார், இந்தச் சரித்திர நாயகி! சுக போக வாழ்க்கை அல்ல, அவர் அனுபவித்தது.

சரித்திரத்தின் ஓர் அத்தியாயம் முடிந்தது. இல்லை. சகாப்தம் சாய்ந்தது!

## அப்போ சரிதான்



ஆண்டு 1935. பிப்ரவரி மாதம்.

வங்காளத்தின் கவர்னராக இருந்த சர் ஜே. அண்டர்சன் சாந்திநிகேதனத்தைச் சுற்றிப் பார்த்து வருகிறார்.

பெண்கள் விடுதி நுழைவாயிலில் ஓர் அறையில் மேஜை மீது அழகாகப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறை நேர்த்தியும் அது பராமரிக்கப்பட்டுள்ள விதமும் கவர்னரைக் கவருகின்றன. தற்செயலாக நின்று, அங்குப் புத்தக அலமாரியில் உள்ள புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறார் கவர்னர்.

''சோஷலிசத்துக்குப் புத்திசாலிப் பெண்ணின் வழித்துணை'' என்ற பெர்னார்ட் ஷாவின் புத்தகம் கைக்குக் கிடைக்கிறது. அடுத்த புத்தகத்தைப் பார்க்கிறார். இன்னொன்று எடுக்கிறார். எல்லாமே சோஷலிசம் பற்றிய நூல்கள்.

''இந்த ரெட் லேடி யார்?'' என்று பக்கத்தில் இருந்தவர்களிடம் கேட்கிறார் கவர்னர்.

''நேருவின் மகள்'' என்று பதில் கிடைக்கிறது. கவர்னர் கிண்டலாகச் சொல்கிறார். ''அப்போ சரிதான். ....!''

# உழைக்கவே பிறந்த உத்தமி



இந்திரா காந்தியின் பாட்டனார் மோதிலால் நேரு லேசுப்பட்டவரா என்ன? ஜவகர்லால் நேருவுக்குத் தந்தையாயிற்றே!

மோதிலால் நேரு ஒரு சமயம் பேத்தி இந்திராவைப் பார்த்துச் சொன்னார்:

''குழந்தை இந்திரா! உலகத்தில் இரண்டு வகை மக்கள் இருக்கிறார்கள். உழைக்கிறவர்கள் ஒருவகை; பேர் தட்டிக் கொள்கிறவர்கள் இன்னொரு வகை. நீ முதல் வகையாக இரு . . . .''

திருமதி இந்திராகாந்தி, ''நான் எப்பொழுதும் இந்த முதல் வகையாக இருக்கவே முயன்று வந்துள்ளேன்'' என்று சொன்னார்.

இந்திராகாந்தி மென்மையாகத் தோற்றமளிப்பார். அவரது புன்னகை யாரையும் பயமுறுத்தாது. ஆனால் அந்த மென்மையான உடலுக்குள்ளே உறுதியான ஆன்மா இருந்தது. தன்னம்பிக்கையும் அரிய அரசியல் தீட்சண்யமும் இருந்தன.

அவர் மற்றவர்களிடம் ஆலோசனை கேட்பார். ஆனால் சுயமாகச் சிந்தித்து, சொந்த முடிவுக்குத்தான் வருவார்.

## நாட்டுக்காக உயிர்விட்ட தேச சேவகி

''நான் எப்பொழுதும் என்னை ஒரு தேச சேவகியாகவே கருதி வந்துள்ளேன்.. இந்த நாட்டின் மகத்தான மக்களின் வேலைக்காரியாகவும் என்னை நான் கருதிக் கொள்கிறேன்.. என் மீது வைத்துள்ள நம்பிக்கையை நான் நிறைவேற்ற முடியும் என்றே நம்புகிறேன்...''

1966 ஜனவரி 19ல், முதல்முறையாக காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சி திருமதி இந்திரா காந்தியைப் பிரதமர் பதவிக்குத் தனது வேட்பாளராகத் தேர்ந்தெடுத்த சமயம் நன்றி தெரிவித்துப் பேசியபோது அவர் தன்னைப்பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வார்த்தைகள் வீண்போகவில்லை. நாடு அவர் மீது வைத்த நம்பிக்கையை அவர் நல்ல வகையில் நிறைவேற்றி, அந்த அரும்பணியில் தனது நல்லுயிரையும் நாட்டுக்காகவே அர்ப்பணித்துவிட்டார்.

அவரது பணியை நினைக்கும்போது உள்ளம் பெருமிதத்தால் விம்முகிறது. அவரது பலியை எண்ணும்போது துக்கத்தால் நெஞ்சம் துடிக்கிறது.

இந்திரா காந்தியின் இணையற்ற சாதனை விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறையில் நிகழ்ந்துள்ளது. ஜவகர்லால் நேருவின் மகள் என்பதற்கிணங்க அவர் அப்பாவின் கனவுகளைத் தப்பாமல் நிறைவேற்றிவிட்டார்.

பசுமைப் புரட்சியின் மூலம் உணவு உற்பத்தியில் சாதனை, அமைதிப் பணிகளுக்கு அணுசக்தி உபயோகம், அணு வெடிப்புச் சோதனை, வானவெளியில் தகவல் தொடர்புக்குச் செயற்கைக் கோள், விண்கலம் செலுத்தும் ராக்கெட் தயாரிப்பு, விண்வெளியில் முதல் தடவையாக இந்தியர்களை அனுப்பல்.. இவையெல்லாம் இதயம் களிக்கும் செய்தியல்லவா!


பார்
புகழும்
பாரதத்தின்
தாய்













SAFDARJANG Rd
27





# தமிழக வருகையின் போது







கல்பாக்கம் அணுமின் நிலையத் தொடக்க விழாவில் (23-7-83)

தமிழகத்தில் நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டபோது (28-3-83)








சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்றுநீர் கொண்டுவரும் திட்டத் தொடக்க விழாவில் (25-5-83)





சென்னைத் துறைமுகத்தின் விரிவாக்கப் பணிகள் தொடக்க விழாவில் (18-12-83)














## "மம்மி, நான் மேலே போறேன்!"

திருமதி இந்திரா காந்தியின் வாழ்க்கையில் துயரமிக்க சம்பவமொன்று 1980 ஜூன் 23 ஆம் தேதி நடந்தது.

33 வயதுள்ள அவரது இரண்டாவது மகன் சஞ்சய்காந்தி தனது ஒற்றை எஞ்சின் இரட்டை சிட் பிட்ஸ் 2-ஏ விமானத்தில் பயிற்சி மேற்கொண்டார்.

புதுடில்லி சப்தர்ஜங் விமான நிலையத்தை விட்டுக் கிளம்பிய சற்று நேரத்திற்கெல்லாம் அந்த விமானம் விபத்துக்குள்ளாகி நொறுங்கியது. சஞ்சய்க்கு சாவைக் கொடுத்தது. சஞ்சய்யுடன் பயணம் செய்த அவரது நண்பர் கேப்டன் சுபாஷ் சாக்சேனாவும் விபத்தில் மாண்டு போனார்.



அன்றைய தினம் காலை 7.30மணிக்கு பிரதமரின் இல்லம் இருந்த சப்தர்ஜங் சாலையிலிருந்து சில நிமிடங்களில் காரில் சென்று சேரக்கூடிய விமான நிலையத்திற்கு சஞ்சய் புறப்பட்டார். வழக்கமாக அவர், ''அம்மா நான் புறப்படுகிறேன்'' என்றுதான் சொல்லிவிட்டுப் போவார். ஆனால் அன்றைய தினம் மட்டும் ''மம்மி நான் மேலே போறேன்'' என்று சொன்னார். தனது தாயுடன் அவர் பேசிய கடைசி வார்த்தைகள் அவைதான்.

விமானம் நொறுங்கியது. நாடே அதிர்ந்தது. துக்கத்தில் ஆழ்ந்தது. ஆனால் அன்னை இந்திரா நொறுங்க வில்லை. அவரை நெருங்கி ஆறுதல் சொல்ல வந்தவர்களை அவர் தேற்றி அனுப்பினார்.

சொந்தப் பேரிழப்பை - தேசத்தின் பெருநஷ்டத்தைப் பெருந்தன்மையுடன் தாங்கிக் கொண்ட போற்றரும் பெருமாட்டியே இந்திரா காந்தி.

## கவலைக்குக் கைகண்ட மருந்து

அரசாங்க காரியத்தில் ஈடுபடாத போது, மனத்தை இலகுவாக்கிக் கொள்ள அன்னை கடைப்பிடித்த வைத்திய முறை என்ன தெரியுமா?

சாதாரண சின்ன விஷயங்களில் சிந்தை செலுத்துவது. பேரக் குழந்தைகளுடன் விளையாடப் போவார்.

இல்லாவிட்டால் குறுக்கெழுத்து வார்த்தைப் புதிர்களில் ஈடுபடுவார். ஒரு பேட்டியில் இதை அவரே சொல்லியிருக்கிறார்.

''இங்கிலாந்தில் மாணவியாக இருந்த பொழுதிலிருந்தே எனக்கு இந்தப் பழக்கம் உண்டு. கவலைகளுக்கு அது கைகண்ட மருந்து. மிகச் சிறந்த இலக்கிய விளையாட்டுங்கூட.''

இந்திரா காந்திக்கு ஏதேனும் புதிர் தோன்றிவிட்டால் போதும், பக்கத்தில் இருக்கிறவர்களைப் பார்த்து, ''உங்களால் இந்தப் புதிரை விடுவிக்க முடியுமா?'' என்று கேட்பார்.

## செத்தவர்களுக்காகத் துக்கப்படாதே!

செத்தவர்களுக்காகத் துக்கப்படுவது இந்திரா காந்திக்குப் பிடிக்காது. இருப்பவர்களுக்காக உயிர் இருக்கும்வரை பாடுபடுவது தான் பிடிக்கும்.

ஒரு சமயம் அமெரிக்கர் ஒருவர் அவரைப் பேட்டி காண்கிறார். "உங்களுக்கு என்ன பிடிக்கும்?" என்று கேட்கிறார்.

"எனக்குக் கவிதை பிடிக்கும். பல கவிதைகள் என் நினைவில் இருந்து என்னை ஆட்கொண்டு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றன."

"ஒரு கவிதை சொல்லுங்கள்..."

"செத்தவர்களுக்காகத் துக்கப்படாதே
ஒதுக்கப்பட்டவர்களுக்காகத் துக்கப்படு
உலகத்தின் தவறு கண்டும்
ஒரு வார்த்தை பேசமுடியா
ஊமை ஜனங்களுக்காக
உருகட்டும் உனது உள்ளம்!"

தொகுப்பு : மீனா

# ஒற்றுமை உணர்வு கொள்வோம்!

தமிழ்ப்பித்தன்

அன்பெனும் நெறியைத் தந்த
அண்ணலைக் கொன்ற தாலே
எண்ணிலாப் பழிச்சொல் பெற்ற
இந்திய நாடே! அந்நாள்
பண்ணிய பாவம் போக்க
பக்குவ மாயு ழைத்தும்
இன்றொரு பாவம் செய்தாய்
இழிநிலை மீண்டும் பெற்றாய்!

இந்திய நாடே, உன்றன்
இழிபெயர் நீங்கச் செய்து
வந்தனைக் குரிய தாக
மாற்றினார் இந்திரா காந்தி!
சிந்தனை ஒளியில் தோய்ந்த
செயல்மிகு தலைவி தன்னை
பந்தமே மறந்து கொன்றாய்
வற்றிடாக் களங்கம் சேர்த்தாய்!

வியர்வையை, உழைப்பை, மூச்சை;
விழிநிறை உணர்வை உன்றன்
உயர்வினுக் காகத் தானே
ஒவ்வொரு நாளும் தந்தார்!
அயர்விலா துழைத்த எங்கள்
அன்னை யார்க்குத் தோட்டா
இயன்றதோர் பரிசாய்த் தந்தால்
இதுதானா நன்றிச் சான்று!

கொடியவர் இடத்துக் கூடக்
" குளிர்மனம் கொள்ளல் வேண்டும்
படிந்திடும் விதத்தில் மாற்றிப்
பண்படச் செய்தல் வேண்டும்



தொடர்ந்திடும் பகைமை வேண்டாம்
சொல்லியே சென்றார் முன்னோர்
மடிவது ஒருமு றையே
மனத்தினில் வஞ்சம் ஏனோ?

கடித்திடும் பாம்பு பூரான்
கனன்றிடும் நெருப்பு வட்டம்
இடியொலி, புயலின் வீச்சு,
இருள்நில நடுக்கம், வெள்ளம்,
வெடித்திடும் எரிம லைகள்
வெறுத்திடல் நியாயம் ஆகும்!
கொடிமலர் இடத்துத் தானா
கொடுமையைக் காட்ட வேண்டும்?

வேலியே பயிரை மேய்ந்தால்
விளைச்சலும் என்ன வாகும்?
மேழியே பாம்பாய் மாறின்
பிடிப்பவன் கதிதான் என்ன?
ஆளினைக் காக்கும் கைகள்
அழிவினில் ஈடு பட்டால்
பாழிலே இந்த வையம்
பன்னூ றாண்டு மூழ்கும்!

கற்றவர் இந்திரா என்னும்
கண்மணி, மண்ணில் வீழ்ந்து
குற்றுயி ராகச் சாய்ந்து
குருதியில் குளித்த தெல்லாம்
முற்றிலும் நாட்டுக் காக
முகிழ்த்ததோர் தியாகம் அன்றோ!
ஒற்றுமை உணர்வி னாலே
உவந்தவர் நெறியைக் காப்போம்!




## அண்ணலின் அக்கறை

பிஞ்சுப் பருவத்தில் இந்திரா காந்தி ஒல்லியாக இருந்திருக்கிறார். அவர் மெலிவாக இருப்பதை எண்ணி, அண்ணல் காந்தியடிகள் கவலைப்பட்டிருக்கிறார். அவர் உடல் நலம் தேறிக் காட்சியளித்த போது அண்ணல் பெருமகிழ்ச்சியடைந்திருக்கிறார்.

காந்தியடிகள் எரவாடா சிறையில் இருந்தபோது அங்கே சென்று அவரைப் பார்த்துவிட்டுத் திரும்பியிருக்கிறார் சிறுமி இந்திரா. அந்தச் செய்தியை நேருவுக்கு ஒரு தந்தியின் வாயிலாகத் தெரிவிக்க முனைந்த அண்ணல், ''இந்துவைப் பார்த்தேன். அவள் உடலில் அதிகமான சதையைக் கண்டேன். அவள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள்'' என்று குறிப்பிட்டார்.

## வினாவும் விடையும்



''தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்த பல்வேறு சக்திகள் என்னென்ன?'' -இந்திரா காந்தி அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார் புகழ் பெற்ற எழுத்தாளர் கே. ஏ. அப்பாஸ்.

''என் பாட்டனார் மோதிலால் நேரு, தந்தை ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி, தாகூர் ஆகிய நால்வரும் நான் சிறுமியாக இருந்தபோது. என் வாழ்க்கையை உருவாக்கியுள்ளார்கள். எனினும் என்னிடமுள்ள எந்தெந்தக் குணப் பண்புகளுக்கு யார் யார் பொறுப்பு என்று என்னால் வரையறுத்துக் கூற இயலாது''—பிரதமர் இந்திரா இவ்வாறு பதிலளித்தார்.

''தங்களது எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதில் தங்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தால் எம்மாதிரியான வாழ்க்கையை ஏற்றுக்கொண்டிருப்பீர்கள்'' அப்பாஸ் கேட்கிறார்.

''நான் ஓர் எழுத்தாளராக ஆகியிருப்பேன். அல்லது சரித்திர ஆராய்ச்சியாளராகவோ, மனித வர்க்கத்தைப் பற்றிய ஆராய்ச்சியாளராகவோ ஆகியிருப்பேன்!''

''உங்களுக்கு சோஷலிசத்தில் நம்பிக்கை உண்டா?''—அப்பாஸ் கேட்கிறார்.

''சந்தேகமில்லாமல்! ஆனால் கொள்கைப் பிடிவாதம் கிடையாது. எல்லாவிதமான சுரண்டலையும் ஒழிக்க வேண்டுமெனக் கருதுகிறேன். அதை அடைவதற்குச் சோஷலிசம் ஒன்றே வழி. ஏனெனில் பெரும்பான்மையான மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். வசதி படைத்தவர்கள் அவர்களை வாட்டுகின்றனர். முதலில் இது தடுக்கப்பட வேண்டும். நல்வாழ்வு வாழ மக்களுக்கு உரிமை உண்டு என்று மனப்பூர்வமாக நம்புகிறவள் நான். உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இருந்து விட்டால் மட்டும் போதுமா? அறிவுத் துறையிலும் ஆன்மிகத் துறையிலும் மக்கள் ஏற்றம் காண வேண்டும். மனவளம் பெற்ற பெரு வாழ்வு வாழ்ந்தவளாதலால் வறுமையின் காரணமாக மக்கள் நம் கலாசாரத்தின் மேன்மையையும் கலைகளின் சிறப்பையும் நன்கு ரசிக்க முடியாமல் இருப்பதைக் கண்டு எனது மனம் பெரிதும் வாடுகிறது. நம் மக்கள் வாழ்க்கையின் நுண்ணிய உணர்வுகளை நுகர்ந்து இன்புறுவதற்கான சூழ்நிலையைக் கண்டிப்பாக அமைத்துத் தர வேண்டுமென்று விரும்புகிறேன்.''



# தந்தையைப் போலப் பெண்

“தாயைப் போலப் பெண்'' என்பது பழமொழி. இந்திராவைப் பொருத்தவரை ''தந்தையைப் போலப் பெண்'' என்பதுதான் பொருந்தும். தந்தைக்கும் மகளுக்கும் பல வகைகளில் ஒற்றுமை இருக்கிறது. அது சாதாரணமான ஒற்றுமை அல்ல; விசித்திரமான ஒற்றுமை.

மோதிலால் நேருவின் ஒரே ஆண்பிள்ளை ஜவகர். அதேபோல் இந்திராவும் ஜவகருக்கு ஒரே குழந்தை. இருவருமே செல்லமாக வளர்ந்தவர்கள்.

ஜவகர் நவம்பர் மாதத்தில் பிறந்தவர். இந்திராவும் அப்படியே.

சிறு வயதிலேயே ஜவகர் நிறைய புத்தகங்கள் படித்தார்; கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார். இந்துராவும் இளவயதிலேயே எண்ணற்ற நூல்களைப் படித்தார்: நூல் அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

இங்கிலாந்தில் கல்வி பயின்றவர் ஜவகர். இந்திரா உயர்தரக் கல்வி பெற்றதும் இங்கிலாந்தில்தான்.

ஜவகர் விடுதலைப் போரில் கலந்து கொண்டார். இன்னல் பல பெற்றார். இந்திராவும் தந்தை வழியைப் பின்பற்றி விடுதலைப் போரில் ஈடுபட்டார்; பலமுறை சிறை சென்றார்; பல இன்னல்களுக்கு ஆளானார்.

ஜவகர் அகில இந்தியக் காங்கிரசுக்கட்சியின் தலைவராக இருந்தார். இந்திராவும் அந்தப் பதவியை வகித்திருக்கிறார். இந்தியா விடுதலை பெற்ற நாள் முதல் இறக்கும் வரை ஜவகர் பிரதமராக இருந்தார். இந்திராவும் நம் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்தார். மக்கள் அன்று நேருவை நேசித்தனர்; இந்திராவையும் அவ்வாறே நேசிக்கின்றனர்.

தந்தை ஜவகரோ இளவயதில் விழாக்கள் பல கொண்டாடுவதை விரும்பினார். ஹோலிப் பண்டிகை, ‘ஈத்', கிறிஸ்துமஸ் முதலிய பண்டிகைகளை நேரு விரும்பினார். இந்திராவும் அந்த விழாக்களை மிகவும் விரும்பினார்.

சாதி, மத வெறி அற்றவர் நேருஜி. இந்திராவும் அப்படியே.

மூடப் பழக்க வழக்கங்களை நேருஜி அறவே வெறுத்தார்; அவைகளைக் கடுமையாகச் சாடி வந்தார். இந்திராவுக்கும் மூடப் பழக்க வழக்கங்கள் கொஞ்சமும் பிடிக்காது.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் உடையவர் ஜவகர். அதேபோல், நேர்மையான உள்ளமும் உரமான நெஞ்சும் உடையவர் இந்திரா.

இவைகளைப் போல் தந்தைக்கும் மகளுக்கும் பல வகைகளில் ஒற்றுமை உண்டு. அதனால், ''தந்தையைப் போலப் பெண்'' என்று இந்திராவை அழைக்கலாம் அல்லவா?

**—நன்றி : எம்.வி. வெங்கட்ராம் எழுதிய “இந்திரா காந்தி”**



## குழந்தைகளை மிகவும் நேசித்தவர் இந்திரா

''இந்திரா காந்தி குழந்தைகளை மிகவும் நேசித்தார்'' என்று பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் மாமனார் திரு ஸ்டீபனா மெய்னோ கூறினார். இந்திரா காந்தியின் இறுதிஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக இத்தாலியில் இருந்து அவர் டெல்லிக்குப் புறப்பட்ட போது, டூரின் விமான நிலையத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ''பெண்களில் இந்திரா காந்தி தனித்தன்மை மிக்கவர். அரசியலில் அவர் உயிருக்கு ஆபத்திருப்பது பற்றி அறிந்தும், துணிச்சலாக மக்கள் சேவையில் ஈடுபட்டு வந்தார்'' என்றார்.

## அப்போதே அரசியல் பிரவேசம்!



மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் நான்கு வயதில் அரசியலில் இறங்கினார். (அப்போது அவர் இந்திரா நேரு என்று அழைக்கப் பட்டார்).

1921ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதியன்று இந்திராவின் தாத்தா மோதிலால் நேரு ஒரு வழக்கில் விசாரிக்கப்பட்டபோது இந்திரா அவருடைய மடியில் உட்கார்ந்திருந்தார்.

மோதிலால் நேருவுக்கு ரூ. 500 அபராதமும் ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப் பட்டது.

அதே போன்ற ஒரு வழக்கில் பண்டித ஜவகர்லால் நேருவுக்கும் ரூ. 500 அபராதமும் ஆறு மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அபராதம் சிறுதொகையாக இருந்த போதிலும், தந்தையும், மகனும் அதைச் செலுத்தமறுத்து விட்டனர்.

இந்த அபராதத்திற்குப் பதிலாக நேருவின் வீடான ஆனந்த பவனிலிருந்து ஏராளமான மரச் சாமான்களையும், தரை விரிப்புகளையும் போலீசார் எடுத்துச் சென்றனர்.


போலீசாரின் இந்தச் செயலுக்குச் சிறுமி இந்திராவும் திட்டுவதன் மூலம் தன்னுடைய பங்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்.

ஆதாரம்: நேரு பற்றிய பி ஆர். நந்தாவின் புத்தகம்.

## அஞ்சல் வழிக் கல்வி

நேரு தனது மகளுக்குத் தந்தையாகவும் தாயாகவும் விளங்கியதோடு ஆசிரியராகவும் திகழ்ந்தார். நாட்டுப் போராட்டத்தினால் சிறையிலிருந்த நேரு, உலக வரலாற்றையும் அறிவியல் நுட்பங்களையும் கடிதங்கள் வாயிலாகவே தமது மகளுக்கு உணர்த்தியிருக்கிறார். அஞ்சல் வழிக் கல்வியை 1930லேயே தொடங்கிவிட்டார் நேரு.

நேரு-தனது மகள் இந்திராவுக்கு, சிறையிலிருந்து 196 கடிதங்கள் எழுதியுள்ளார். முதல் கடிதம் இந்திராவின் 13வது பிறந்த நாளான 19-11-1930ல் எழுதப்பட்டது. அதற்கடுத்த கடிதத்தை 1931ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாளான புத்தாண்டு தினத்தில் எழுதினார்.



## துணிவுக்கொரு தலைவி



இந்தியாவின் சரித்திரத்திலேயே மிக நெருக்கடியான கட்டத்தில் சிரமமானதும் கவலைகள் மிகுந்ததுமான தலைமைப் பதவியைத் தாங்கள் மன உறுதியுடன் ஏற்றுக் கொண்டுள்ளதைப் பாராட்டுகிறேன். இந்த மாபெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. தங்களுடைய துணிவை மட்டும் காட்டவில்லை, இந்திய மக்கள் மீது தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கும் அவர்களது எண்ண எழுச்சிகளிலும் எதிர்கால வளர்ச்சியிலும் தாங்கள் காட்டும் விசுவாசத்திற்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகவும் அமைந்திருக்கிறது.

—எகிப்து அதிபர் நாசர்

[1966-ல் இந்திரா காந்தி பிரதமர் பொறுப்பை ஏற்றபோது அனுப்பப் பெற்ற வாழ்த்துச் செய்தி]

## சகுனம் சொன்னதோ!

துன்மார்க்கர்கள் தன்னைக் கொலை செய்யக்கூடும் என்று அன்னைக்குக் முன்கூட்டியே தெரிந்திருக்கிறது.

ஒரிஸ்ஸாவில் தனது இரண்டு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தில் அக்டோபர் 30ஆம் தேதி பேசுகையில் திருமதி இந்திராகாந்தி உணர்ச்சிவசப் பட்டுக் குறிப்பிட்டார்:

"நாட்டின் சேவைக்காக நான் உயிரிழக்க நேர்ந்தால் அதற்காகப் பெருமைப்படுகிறேன். என்னுடைய ஒவ்வொரு சொட்டு இரத்தமும் நாட்டின் வளர்ச்சிக்கே பயன்படும்; நாட்டை வன்மையும் வேகமும் உள்ள தாக்கும்."



இரத்தம் சிந்துவதைப் பற்றிப் பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு என்ன அவசியம் வந்தது? 30ஆம் தேதி பேசுகிறார்; 31ஆம் தேதி சுடப்படுகிறார்.

இன்னொரு சகுனமும் நடந்திருக்கிறது. அவரது பேரக் குழந்தைகள் 30ஆம் தேதி புதுடில்லியில் கார் விபத்தொன்றில் சிக்கினார்கள். அவர்களுக்காகப் பாதுகாப்பாகப் பின்னால் வந்த காரும் வேனும் விபத்தில் மாட்டிக் கொண்டதால், அவர்களைப் பத்திரமான இடத்துக்குக் கொண்டு செல்ல, கார் டிரைவர் காரை வேகப்படுத்தினார். அதனால் பேரன் ராகுலின் காலில் காயம் பட்டது. பேத்தி பிரியங்கா தலை மோதி வீக்கங்கண்டது.

# இறந்தும் வாழும் இந்திரா

இந்திரா காந்தியின் இறுதிச் சடங்கிற்கு வந்திருந்த ரஷ்யப் பிரதமர் டிக்கனோவை, ஜப்பான் பிரதமர் நாகசோனே சந்தித்துப் பேசினார். ஜப்பான்-ரஷ்யப் பிரதமர்கள் 11 ஆண்டுகளாகச் சந்தித்துப் பேசியதில்லை. அந்த இருநாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை இருந்து வருவதே காரணம்.

இந்திராகாந்தியின் மறைவுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் தினமும் கூடுதலாக ஒரு மணி நேரம் வேலை பார்ப்பதென்று, நாடாளுமன்ற ஊழியர்கள் உறுதியெடுத்துள்ளனர்.

இந்திரா காந்தியின் பெயரில் விருது ஒன்றை டில்லி விளையாட்டு வீரர்கள் சங்கம் நிறுவியுள்ளது. இந்த விருது ஆண்டுதோறும் வழங்கப்படும்.



## இந்திரா விருப்பம்!

"எனது அன்னை இந்திரா காந்தி இமய மலையை மிகவும் நேசித்தார். அவர் தனது அஸ்தி, அப்பனிமலைமீது தூவப்பட வேண்டும் என்று விரும்பினார். எனவே அவர் விருப்பப்படி அவரது அஸ்தி கங்கோத்திரியிலும், அம்மலையின் இதர பகுதிகளிலும் தூவப்படும்."

''இந்திரா காந்தியின் அஸ்தியைப் பனி படர்ந்த இமயத்தின் மீது பரவலாகத் தூவுவதுடன் அவரது பூவுலகப் பயணம் முடிந்து விடும். ஆனால் நாட்டின் பயணம் தொடரும். நிமிர்ந்த நெஞ்சுடன், நினைத்த காரியத்தை முடிக்கும் நோக்குடன் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உறுதியுடன் நடைபோட்டு முன்னேறுவோம்.

''இந்திரா காந்தி தன்னைப் பர்வத ராஜனின் குழந்தையெனப் பாவித்து இமய மலையிடம் அதிக அன்பு செலுத்தினார். பனி மேவிய மலையைக் காணும்போதெல்லாம் அவர் மனம் குதூகலம் அடையும். அவர் புதுத் தெம்பும் பெறுவார்'' என்று மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் அறிவித்தார்.



# தூய அன்னை புகழ் வாழ்க!

பி.வி. கிரி

நாடு போற்றும் நல்லவராம்
நேரு மகளாய்ப் பிறந்தவராம்
ஏடு புகழும் இனியவராம்
இந்திரா காந்தி உயர்ந்தவராம்!

ஒருமைப் பாட்டை வளர்த்தவராம்
'ஒன்றே இந்தியா' என்றவராம்
இருபது அம்சம் தந்தவராம்
இறவாப் புகழை அடைந்தவராம்!

அண்ணல் வழியில் நடந்தவராம்
அமைதி வேண்டி உழைத்தவராம்
கண்ணிமை போலக் காத்தவராம்
கருத்துகள் நாட்டிற் களித்தவராம்!

எளியவர் உயரச் செய்தவராம்
இதயந் தன்னில் வாழ்பவராம்
உலக நாடுகள் கண்டவராம்
உலகத் தலைவர் ஆனவராம்!


அன்பும் பண்பும் கொண்டவராம்
ஆட்சித் திறமை மிக்கவராம்
துன்பம் துடைக்கத் துடித்தவராம்
தூய அன்னை புகழ்வாழ்க!

## மனித நேயம் மிக்கவர்

**1966**-ல் திருமதி இந்திராகாந்தி பிரதம ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மக்கள் வரவேற்றனர்; பாராட்டினர்;

''பெண்மணியால் நாட்டை ஆள முடியுமா?'' என்று ஒரு சிலர் ஐயம் எழுப்பினர். I am no woman but human' என்று அதற்குப் பதிலளித்தார் இந்திரா.

ஆண்-பெண் என்ற பிரிவுகளைக் கடந்து இன எல்லைகளுக்கு அப்பாற்பட்ட மனித நேயம் உடையவராக அவர் திகழ்ந்தார் என்பதையே அவரது மறுமொழி உணர்த்துகிறது.



## அரசியலில் அலுப்புக் கிடையாது

''அரசியலில் உங்களுக்கு எப்போதாவது அலுப்புத் தோன்றியதுண்டா?''—ஒரு நிருபர் பிரதமர் இந்திராவைக் கேட்டார்.

''நான் அரசியலின் அடிப்படை அம்சத்தைத்தான் நோக்குகிறேன். அதை ஒரு தொழிலாகவோ போட்டிக்குரிய விஷயமாகவோ நோக்குவதில்லை''—இந்திரா பதிலளித்தார்.

''நீங்கள் ஆக்கபூர்வமாகத் திட்டங்கள் வகுத்துச் செயல்படுவதைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் சிலர் கேலி செய்கிறார்களே?''

''நான் அதைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை. ஆனால், வகுக்கப்பட்ட திட்டங்கள் எதிர்பார்த்த அளவு வேகமாக நிறைவேறாமல் தாமதித்துக் கொண்டிருக்கும்போதுதான் எனக்கு ஆயாசம் ஏற்படுகிறது''—அன்னை இந்திரா அளித்த மறுமொழி.




## வீரத்தலைவரிடமிருந்து ஈரநெஞ்சம்

''பண்டித நேருவிடம் தங்களை மிகவும் கவர்ந்த அம்சம் எது?''—ஒரு நிருபர் கேட்டார்.

''இது ரொம்பக் கடினமான கேள்வி!'' இந்திரா தயங்கினார்.

''அவருடைய புதல்வியாக இருந்த பாக்கியத்தால் அவரிடமிருந்து எத்தனையோ பண்புகளை அருகிலிருந்து அனுபவித்துப் போற்றியிருப்பீர்கள் என்றாலும் எல்லாவற்றிற்கும் மேலாக..'' நிருபர் தொடர்ந்தார்.

''அவருடைய அடிப்படை மனிதாபிமானம்தான்—தேசப் பிரச்னைகளில் மட்டுமல்லாது சொந்தப் பிரச்சினைகளிலும் ஒவ்வொரு தனிமனிதரிடம் இதயத்தோடு இதயம் நெருக்கமாகக் கலந்து. உறவாடிப் பேசி அவர்களுடைய பிரச்சினைகளை அக்கறையோடு கவனித்து நிறைவேற்றும் ஈர நெஞ்சம்தான் அவருடைய பெரும் சிறப்பு.''



# புதிய பிரதமர் ராஜீவ் காந்தி வாழ்க்கைக் குறிப்பு

இந்தியாவின் ஆறாவது பிரதமராகப் பதவியேற்றுள்ள திரு ராஜீவ் காந்தி அவர்கள் இந்த உயர்ந்த பதவியை இதுவரை வகித்தவர்களுள் மிகவும் இளையவராவார்.

விமான 'பைலட்'டாக இருந்து அரசியலுக்கு வந்த திரு ராஜீவ் காந்தி அவர்களுக்கு கடந்த ஆகஸ்ட் 20ஆம் தேதி 40 வயது பூர்த்தி அடைந்தது. 1981-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அவர் அரசியலில் நுழைந்ததிலிருந்தே அவரது அன்னை திருமதி இந்திரா காந்தி அவர்களின் அரசியல் வாரிசாகவும் கருதப்பட்டார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் டிரினிடி கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றவர் திரு ராஜீவ் காந்தி அவர்கள். 20-8-1944 அன்று பம்பாயில் பிறந்தார். தனது தாய்வழி பாட்டி, தாத்தா பெயர்களைக் குறிக்கும் வகையில் அவருக்கு ராஜீவ்ரதன் காந்தி என்று பெயரிடப்பட்டது. ராஜீவ் என்றால் சம்ஸ்கிருதத்தில் கமலம் (தாமரை) என்றும், ரதன் என்றால் ஜவஹர் என்றும் பொருள்.

குழந்தை பிறந்தபோது பண்டித நேரு சிறையில் இருந்தார். அவர்தான் ராஜீவ் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்.

திரு ராஜீவுக்கு 10 வயதானபோது 'போர்டிங்' பள்ளிக்கு அனுப்பப்பட்டார். டூன் பள்ளியில் படிப்பை முடித்துக் கொண்டு 1960-ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்று வெளியே வந்தார்.

1962-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற அவர் 'டிரினிடி' கல்லூரியில் 'மெகானிகல் என்ஜினீயரிங்' படிப்பில் சேர்ந்தார். இங்குதான் 1965-ஆம் ஆண்டு கோடையில் தனது எதிர்கால மனைவியான சோனியா மெய்னோ என்ற டூரின் நகரத்தைச் சேர்ந்த இத்தாலியப் பெண்ணை அவர் சந்தித்தார்.

திரு ராஜீவ்-சோனியா திருமணம் 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்தது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது கோடை விடுமுறையில் அவர் ரொட்டிக் கடை ஒன்றில் வேலை செய்ததாகவும், லாரியில் செங்கல் ஏற்றும் வேலையையும் அவர் செய்ததாகவும் அவருடன் படித்த நண்பர் ஒருவர் கூறினார்.

படிக்கும்போதே தாத்தா அளித்த ஊக்கத்தின் பேரில் விமானம் ஓட்டும் பயிற்சியிலும் அவர் ஈடுபட்டு வந்தார். 1968 மே மாதம் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பயிற்சி விமானியாக அவர் சேர்ந்தார். 7 மாதத்துக்குப் பின் டகோடா விமானத்தில் பயணிகளை அவர் ஏற்றிச் சென்றார். ஓராண்டிற்குப் பின் 'போக்கர் பிரண்ட்ஷிப்' விமானத்தை அவர் ஓட்டத் தொடங்கினார். பின்னர் அவர் 'ஆவ்ரோ' விமானங்களை ஓட்டத் தகுதி பெற்றார். அரசியலில் நுழையும் வரை அந்த விமானங்களிலேயே அவர் பறந்தார்.

1981-ஆம் ஆண்டு அரசியல் உலகில் அவர் அடியெடுத்து வைத்தார். அதே ஆண்டு ஜூன் மாதம் அமேதி தொகுதியில் போட்டியிட்டு, அனைவரும் எதிர்பார்த்ததற்கு மேலாக 2 லட்சத்து 37 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

1981 ஜூன் 25-ஆம் தேதி இளைஞர் காங்கிரஸ் (இ) தேசிய செயற்குழு உறுப்பினராக திரு ராஜீவ் காந்தி அவர்கள் நியமிக்கப்பட்டார். 1983 பிப்ரவரி 2ஆம் தேதி அ. இ. கா. க. (இ) பொதுச் செயலாளரானார்.

பின்னர் அவர் கட்சிப் பிரதிநிதியாகப் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்துள்ளார். 1983 செப்டம்பரில் தனது அன்னையுடன் அவர் ஐ. நா. சபைக்குச் சென்றார். அங்கு ஐ. நா. 37-வது பொதுச்சபைக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் 101 நாடுகள் அடங்கிய அணி சேரா இயக்கத்துக்கு திரு ராஜீவ் காந்தி அவர்கள் தானாகவே தலைவராகிறார்.

இந்தப் பதவிக்கு திருமதி இந்திராகாந்தி அவர்கள் கடந்த ஆண்டு (1983) மார்ச் மாதம் புதுடில்லியில் நடந்த உச்ச மாநாட்டின்போது தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவியின் காலம் 3 ஆண்டுகள்.

# இந்திரா காந்தி இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவி



இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகெங்கும் பரவலாகக் கொண்டாடப்பட்ட தலைவியாகத் திகழ்ந்தவர் திருமதி இந்திரா காந்தி.

நாட்டு மக்களின் பேரன்புக்கு உரிய அந்த ஒப்பிலாத் தலைவியின் வரலாற்றையும் அவரது முன்னோர்கள் பற்றிய விவரங்களையும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

**1716**

இந்திராகாந்தியின் முன்னோரான திரு ராஜ்கவுல், மொகலாய அரசரான ஃபரூக் ஸ்யாரின் அழைப்பின் பேரில் டில்லி வந்தார். அவருக்கு கால்வாய் அருகில் வீடுஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. கால்வாய் ( Nahar ) என்பது-செல்லப் பெயராக ''Naharu'' என்று வழங்கி நாளடைவில் அது நேஹரு ( Nehru ) என்று வழங்கியது.

**1850**

ராஜ்கவுலின் வழித்தோன்றலான லட்சுமி நாராயண் நேரு கடைசி மொகலாய அரசரான பகதூர் ஷாவின் தர்பாரில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதிநிதியாக இருந்தார்.

**1857**

லட்சுமி நாராயணனின் மகன் கங்காதார் பிரிட்டிஷாருக்கு எதிராக அரசருக்கு உடந்தையாக இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டார்.

**1861** மே 6

கங்காதாரின் மகன் மோதிலால் நேரு ஆக்ராவில் பிறந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு மோதிலால் நேருவின் குடும்பம் அலகாபாத்தில் குடியேறியது. அங்கு அவர் வழக்கறிஞராகத் தொழில் நடத்தினார்.

**1889, நவ. 14**

ஜவஹர்லால் நேரு பிறப்பு.

**1900**

மோதிலால் நேரு அலகாபாத்தில் பெரும் தோட்டத்தை வாங்கினார். அங்குள்ள மாளிகைக்கு 'ஆனந்தபவன்' என்று பெயரிடப்பட்டது.

**1905**

நேரு இங்கிலாந்திலுள்ள ஹாரோபள்ளியில் சேர்ந்தார்.

**1907**

ஜவஹர்லால் நேரு கேம்பிரிட்ஜ், டிரினிடி கல்லூரியில் சேர்ந்தார்.

**1910**

பட்டப்படிப்பை முடித்த நேரு சட்டம் பயின்றார்.

**1912**

ஜவஹர்லால் நேரு இந்தியா திரும்பினார். வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்.

**1912** டிசம்பர்:

ஜவஹர்லால் பன்கிப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

**1915** ஜனவரி

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பினார். ஜவஹர்லால் நேரு முதல் தடவையாக அரசியல் கூட்டத்தில் பேசினார்.

**1916** பிப்ரவரி 8

ஜவஹர்லால் நேரு — கமலாகவுல் திருமணம்.



**1927**

தந்தை நேருவுடன் இந்திரா ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குச் சென்றார்.

**1927**

நேரு குடும்பம் இந்தியா திரும்பியது. இந்திரா அலகாபாத் செயிண்ட் மேரிஸ் கான்வெண்டில் சேர்க்கப்பட்டார்.

**1928**

ஜவஹர்லால் தன் மகளுக்குத்தொடர்ந்து கடிதங்கள் எழுதினார். இவைதான் பிறகாலத்தில் 'தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்' என்ற நூலாக வெளிவந்தன. இந்திரா, காந்தியடிகளின் சர்க்கா சங் கத்தைத் தொடங்கினார். மோதிலால் இரண்டாவது முறையாகக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக ஜவஹர்லால் நேரு தேர்ந் தெடுக்கப்பட்டார்.

**1916 டிசம்பர்**

லக்னோ-வில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஜவஹர்லால் மகாத்மா காந்தியைச் சந்தித்தார்.

**1917 நவம்பர் 19**

இந்திரா பிறப்பு.

**1922**

இந்திரா அகமதாபாத்துக்கு வந்தார். காந்தியின் ஆஸ்ரமத்தில் தங்கினார்.

**1923 டிசம்பர்:**

இந்திரா மாடர்ன் பள்ளியில் சேர்ந்தார். கமலா நேருவுக்கு ஆண்குழந்தை பிறந்து இறந்தது. கமலா நேரு நோய்வாய்ப்பட் டார்.

**1926**

மருத்துவச் சிகிச்சைக்காகக் கமலா-நேரு சுவிட்சர்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடன் இந்திரா வும் சென்றார். இந்திரா இண்டர் நேஷனல் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இந்திரா, ரோமன் ரோலண்ட், ஐன்ஸ் டின், சர் ஜகதீஸ் சந்திரபோஸ், எர் னஸ்ட் டாலர், ரோஜர் பிட்வின் போன்ற வர்களைச் சந்தித்தார்.

**1929**

ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1930 ஏப்ரல் 6**

மோதிலால் நேரு தனது மாளிகையைக் காங்கிரஸ் கட்சிக்கு அளித்தார். அது சுய ராஜ் பவன் என்ற புதுப் பெயர் பெற் றது. இந்திரா அலகாபாத்தில் வானர சேனை என்ற அமைப்பை ஏற்படுத்தினார். சிறுவர் சிறுமிகளைக் கொண்ட அந்த அமைப்பு காங்கிரஸ் ஊழியர்களிடையே துண்டுப் பிரசுரங்களை எடுத்துச் செல் வது, தகவல்களைக் கொண்டு செல்வது, கொடிகளைத் தயாரித்து அளிப்பது போன்ற பணிகளைச் செய்தது.

**1930 அக்டோபர் 26**

ஜவஹர்லால் நேரு இரண்டாவது முறை யாகத் தொடர்ந்து தன்மகள் இந்திரா வுக்குக் கடிதங்கள் எழுதினார். இந்தக் கடிதங்கள் 1933-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் நாள் வரை தொடர்ந்து எழுதப் பட்டன. இவைதான் 'உலக சரித்திரம்' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள் ளன.

## திறமையான நிர்வாகி

**யே**ல் பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968-ல் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, இந்திய அரசு குறித்து அவரிடம் வினவினார்.

"இந்திரா காந்தி திறமையாக நிர்வாகம் செய்து வருகிறார். மாநிலங்களுக்கு இருக்கும் தடைகளை அவர் உணராமல் இல்லை" என்று குறிப்பிட்டார் அண்ணா.



**1930 நவம்பர் 14**

நேருவின் பிறந்தநாள் ஊர்வலத்திற்கு இந்திரா தலைமை வகித்தார். நேரு சிறையிலிருந்ததால் அவரது பேச்சைக் கமலா நேரு படித்தார்.

**1931 ஜனவரி 1**

கமலா நேரு கைது செய்யப்பட்டார்.

**1931 பிப்ரவரி 2**

மோதிலால் நேரு மறைவு.

**1931 ஜூன்**

இந்திரா புனேயில் உள்ள பீப்பிள்ஸ் ஓன் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.



**1931 டிசம்பர்**

ஜவகர்லால் நேரு மீண்டும் கைது செய்யப்பட்டார்.

**1932 பிப்ரவரி**

புத்தகங்களை விரும்பிப் படிப்பதுபோல இந்திரா விளையாட்டுகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். மலையேறுதல் முதல் இந்திய நடனம் வரை அனைத்தையும் கற்றார்.

**1932 செப்டம்பர் 18**

காந்தியடிகளை அவர் இருந்த சிறைக்குச் சென்று சந்தித்தார் இந்திரா.

**1924 ஜூலை - 1935 ஏப்ரல்**

தாகூரின் சாந்திநிகேதனில் இந்திரா படித்தார்.

**1935 மே**

கமலா நேரு மருத்துவச் சிகிச்சைக்காக ஐரோப்பா சென்ற பொழுது இந்திராவும் உடன் சென்றார்.

**1936 பிப்ரவரி 28**

லாவ்ஸனேயில் கமலா நேரு இறந்தார்

**1937**

இந்திரா ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்தார். அப்பொழுதுதான் அங்குப் படித்துக் கொண்டிருந்த பெரோஸ் காந்தி அவருக்கு நண்பரானார்.

**1941**

இந்திராவும் பெரோஸ் காந்தியும் கப்பலில் தாயகம் திரும்பினர். வரும்பொழுது இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்தனர்.

**1942 மார்ச் 26**

இந்திரா பெரோஸ் காந்தி திருமணம்,

**1942 ஆகஸ்ட் 7**

பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் ஜவஹர்லால், பெரோஸ் காந்தி, இந்திரா மூவரும் கலந்து கொண்டனர்.

**1942 செப்டம்பர் 10**

அலகாபாத்தில் இந்திரா காந்தி பேசிய கூட்டத்தில் பிரிட்டிஷ் இராணுவவீரர்கள் சூழ்ந்து கொண்டு அவரைக் குறிபார்த்து சுட முனைந்தனர். பெரோஸ் காந்தி குறுக்கிட்டுத் தடுத்தார். இந்திராவும் பெரோஸ் காந்தியும் கைது செய்யப்பட்டு, நைனி சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



**1943 மே 13**

வங்காளத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தின் காரணமாக இந்திரா விடுதலை செய்யப்பட்டார்.

**1944 ஆகஸ்ட் 20**

இந்திராவின் முதல் ஆண் குழந்தை ராஜீவ் பிறப்பு.

**1946 டிசம்பர் 14**

இந்திராவின் இரண்டாவது ஆண் குழந்தை சஞ்சை பிறப்பு.

**1947 ஆகஸ்ட் 15**

நாடு விடுதலை அடைந்தது.

**1947-48**

காந்தியடிகளின் வேண்டுகோளின்படி டில்லியில் வகுப்பு ஒற்றுமையைப் பராமரிக்கும் பணிகளில் இந்திரா காந்தி ஈடுபட்டார்.

**1948 அக்டோபர்**

வெளிநாடுகளுக்குத் தன் தந்தை ஜவகர்லால் நேருவுடன் பயணம் மேற் கொண்டார்.

**1953 ஏப்ரல் 16**

இந்தோனேஷியா பாண்டுங் மாநாட்டில் இந்திரா கலந்து கொண்டார்.

**1953-54**

இந்திரா முதல் தடவையாக சோவியல் ரஷ்யாவுக்குச் சென்றார். 1954-இல் சீனாவுக்குச் சென்றார்.

**1955 ஏப்ரல்**

பாண்டுங் மாநாட்டில் இந்திரா காந்தி கலந்து கொண்டார்.

**1955 செப்டம்பர் 19**

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு உறுப்பினராக இந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1955 செப்டம்பர் 22**

அலகாபாத் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இந்திரா தேர்ந்தெடுக்கப் பட்டார்.

**1958 பிப்ரவரி 23**

காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்டரி போர்டுக்கு உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

**1959 பிப்ரவரி 8 — 1960 ஜனவரி 18**



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இந்திரா பணியாற்றினார். மகாராஷ்டிர மாநிலம், கேரள மாநிலம் அரசியல் நிலைமைகளை அறியச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

**1959 டிசம்பர்**

கேரள மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பொறுப்புகளை இந்திரா கவனித்துக் கொண்டார்.

**1960 செப்டம்பர் 8**

இந்திராவின் கணவர் பெரோஸ் காந்தி மறைவு.

**1960 நவம்பர் 18**

பாரிஸிலுள்ள யுனெஸ்கோ நிறுவனத்தின் நிருவாக் வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் இந்திரா.

**1961 ஆகஸ்ட்**

இந்திரா காந்தி கென்யா, உகண்டா, தான்சானியா, இரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

**1963 ஜனவரி 19**

மத்திய மக்கள் குழுத் தலைவராக இந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1963**

நல்லெண்ணப் பயணமாகப் பல ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்திரா காந்தி சென்றார்.

**1964 மே 27**

பிரதமர் ஜவகர்லால் நேரு மறைவு.

**1964 ஜூன்**

புதிய பிரதமர் லால்பகதூர் அமைச்சரவையில் செய்தி-ஒலிபரப்புத் துறையில்

அமைச்சராசத் திருமதி இந்திரா காந்தி நியமிக்கப்பட்டார்.

1964 ஆகஸ்ட் 20

மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1966 ஜனவரி 10

தாஷ்கண்டில் லால்பகதூர் சாஸ்திரி மரணமடைந்தார்.

1966 ஜனவரி 19

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அக்குழுவின் தலைவராகத் திருமதி இந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1966 ஜனவரி 24

இந்தியப் பிரதமராக இந்திரா காந்தி பதவி ஏற்றார்.

1967 பிப்ரவரி

பொதுத் தேர்தலில் ரே-பெரேலி தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு இந்திராகாந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1967 மார்ச் 13

இந்திரா காந்தி பிரதமராகப் பதவி ஏற்றார்.

1969 ஜூலை 19

14 பெரிய வங்கிகளை நாட்டுடைமையாக்கினார் இந்திராகாந்தி.

1970 டிசம்பர் 27

இந்திரா காந்தியின் ஆலோசனையின்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

1971 மார்ச் 1-10

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தியின் தலைமையிலுள்ள காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்றது.



1971 மார்ச் 18

இந்திரா பிரதமராகப் பதவி ஏற்றார்.

1975 ஜூன் 26

குடியரசுத் தலைவர் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார்.

1977 மார்ச் 21

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தியும், காங்கிரஸ் (இ) கட்சியும் தோற்றார்கள்.

1977 மார்ச் 21

பிரதமர் பதவியை இந்திரா காந்தி ராஜினாமா செய்தார்.

1978 மே 15

சிக்மகலூர் தேர்தலில் திருமதி இந்திரா காந்தி வெற்றி பெற்றார்.

1979 ஜூலை 15

திரு மொரார்ஜி தேசாய் அமைச்சரவை பதவி விலகியது.

1979 ஜூலை 18

திரு சரண்சிங் பிரதமரானார்.

1979 ஆகஸ்டு 20

சரண்சிங் ராஜினாமா செய்தார்.

1979 டிசம்பர் 15

குடியரசுத் தலைவர் திரு என். சஞ்சீவ ரெட்டி பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

1980 ஜனவரி 14

காங்கிரஸ் (இ) தேர்தலில் வெற்றி பெற்றது. திருமதி இந்திரா காந்தி ரேபரேலி, மேடக் இரு தொகுதிகளில் இருந்தும் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1980 ஜனவரி 15

திருமதி இந்திரா காந்தி பிரதமரானார்.

1980 ஜூன் 23

திரு சஞ்சய் காந்தி, எம்.பி. விமான விபத்தில் இறந்தார்.


1983 மார்ச்


அணி சேரா இயக்கத்தின் தலைவராகத் திருமதி இந்திரா காந்தி டில்லி கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


1984 அக்டோபர் 31

இந்திரா காந்தி இல்லத்திலிருந்து அலுவலகத்திற்கு நடந்து செல்லும்போது பாதுகாப்புக் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட வேதனை நிகழ்ச்சி நடைபெற்றது.

—மாமூலன்









# அஸ்திக் கலசத்திற்கு மக்கள் அஞ்சலி

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அஸ்தி (சாம்பல்) 40 கலசங்களில் சேகரிக்கப் பெற்று, பல மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

டில்லியிலிருந்து அஸ்திக் கலசம் விமானத்தில் பெங்களூருக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து 5.11.84 அன்று தனி ரயிலில் எடுத்து வரப்பட்டது.

ஜோலார்ப்பேட்டையில் ரயில் நிலையத்தில் அஸ்திக் கலசத்தை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், காட்பாடி, வாலாஜா ரோடு, அரக்கோணம், திருவள்ளூர், ஆவடி ஆகிய ரயில் நிலையங்களில் சில நிமிடங்கள் ரயில் நிறுத்தப் பட்டது. அங்கெல்லாம் ஏராளமான பொதுமக்கள் இந்திரா காந்தியின் அஸ்திக் கலசத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

6.11.84 பிற்பகல் 4.10 மணிக்கு தனி ரயில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தடைந்தது. முப்படை அதிகாரிகள் அஸ்திக் கலசத்தைப் பெற்று, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடம் அளித்தனர். அவர், அதனை மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த காவல்துறை வாகனத்திற்கு எடுத்துச் சென்றார். அதனை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பெற்று, வாகனத்தின் மேல் அதற்கென அமைக்கப் பெற்ற இடத்தில் வைத்தார். பின்னர் தமிழக அரசின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன. தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ்சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது.

பின்னர், வாகனம் புறப்பட்டது. இருபுறங்களிலும் இராணுவ வீரர்கள் வரிசையாக நின்று மரியாதை செலுத்தினார்கள். 'அமரர் இந்திரா வாழ்க' என்னும் வாழ்த்தொலி எங்கும் ஒலித்தது.

வாகனம் மெதுவாக நகர்ந்து சென்றது. அமைச்சர்களும், பொதுமக்களும் வாகனத்தின் பின்னால் நடந்து வந்தனர். அரசினர் தோட்டத்தின் தலைவாயில் வழியாக நுழைந்து, ராஜாஜி மண்டபத்தை 5 மணியளவில் அடைந்தது.

ராஜாஜி மண்டபத்தில், தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அஸ்திக் கலசத்தைப் பெற்றுக் கொண்டார். ராஜாஜி மண்டபத்தின் உள்ளே மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அஸ்திக் கலசம் வைக்கப்பட்டது. பெரிய அளவில் தீட்டப்பட்டிருந்த இந்திராவின் உருவப் படமும் இடம்பெற்றிருந்தது.

அமைச்சர் பெருமக்களும், முப்படை அதிகாரிகளும் அஸ்திக் கலசத்திற்கு மலர் மாலைகள் அணிவித்தும்— மலர் வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தினர்.

மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் தமது துணைவியாருடன் வந்து, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தமிழ்நாடு இசைக்கல்லூரி மாணவிகளும், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களும் பக்திப் பாடல் பாடினர்.

அக்டோபர் 7-ஆம் தேதி காலை 8 மணியிலிருந்து 9-ஆம் தேதி இரவு 8 மணி வரை பொதுமக்கள் மரியாதை செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் அன்னை இந்திராவின் அஸ்திக்கு அஞ்சலி செலுத்தினர்.

இசைக் கலைஞர்கள் பலர் இசை அஞ்சலி செலுத்தினர்.

அன்னையின் அஸ்திக் கலசம் 10-ந்தேதி காலை 11.15 மணிக்கு பெங்களூருக்குக் கொண்டு செல்லப் பட்டு, அங்கிருந்து டில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இமயம்போல் சிறப்புப் பெற்ற பாரத அன்னையின் அஸ்தி-இமய மலையில் தூவப்பட்டது சிறப்புக்குரிய செய்தியாகும்.











# மதுரை முத்து மறைவு

திராவிட இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும், மதுரை மாநகராட்சியின் முன்னாள் மேயருமான மதுரை திரு எஸ். முத்து, எம்.எல்.சி. அவர்கள் (வயது 69) நெஞ்சுவலி காரணமாக மதுரை மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப் பட்டு 5.11.84 அன்று இயற்கை எய்தினார்.

மதுரை முத்து அவர்கள் 1916ஆம் ஆண்டு மார்ச்சு 13ஆம் நாள் பிறந்தார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய தலைவர்களிடம் நெருக்க மாகப் பழகியவர். 1936ஆம் ஆண்டு முதல் அரசியலில் ஈடு பட்டார்.

1957ஆம் ஆண்டு முதல் 1964 வரை மதுரை மாநகராட்சி உறுப்பினராகப் பணியாற்றியவர் மதுரை மாநகராட்சியின் முதல் மேயராகத் (1971) தேர்ந்தெடுக் கப்பட்டார்.

1978ல் மீண்டும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

27.6.80லிருந்து மறையும்வரை சட்ட மேலவை உறுப்பினராக இருந்து வந்தார்.

மதுரை முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் மற்றும் அமைச்சர் களும் இரங்கல் செய்தி விடுத்திருந்தனர்.

மாவீரர் மதுரைமுத்து அவர்கள் திராவிடர் இயக்க மூத்த தலைவர்களில் முக்கியமான ஒருவராகத் திகழ்ந் தார். இவர் 47 ஆண்டுகளாகத் தம்மை முழுக்க முழுக்க பொதுத் தொண்டுக்கு ஒப்படைத்துவிட்டு மிக்க பெரும் புகழையும் பெரு மையையும் பெற்றவர். பாண்டிய நாட்டில் திராவிடர் இயக்கம் வேரூன்றிப் பூத்துக் காய்த்துக் கனிய அவர் அடிப்படையாக அமைந்தார். அவர் அழுத்தமான கொள்கைப் பிடிப்புக் கொண்ட சிறந்த செயல் வீரர். பெரியார். பேரறிஞர் அண்ணா ஆகியோ ரால் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

கொள்கைக்காகப் பலமுறை சிறைப்பட்டவர். அவரது மறைவு பொதுவாகத் திராவிடர் இயக்கத்திற்கும் குறிப்பாக மதுரை மாநகருக்கும் பெரிய தொரு இழப்பாகும்.

மதுரையில் நடந்த மதுரை முத்து அவர்களின் இறுதி ஊர் வலத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அனைத்துக் கட்சி யினரும் பொதுமக்களும் திர ளாகக் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு 'மதுரை முத்து அவர்களிடம் (8-8-78) மாண்புமிகு முதல்வர் அவர்கள் செங்கோல் வழங்குகிறார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002


"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என
பார்த்தாலே தெரிகிறது
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

